
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 டிசம்பர் 8 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்
1932 - 2022

வரு. 90 இல. 290 | Thursday 08, December, 2022 | 12பக்கங்கள் | 50/-







## வரவு - செலவுத் திட்டம் 2023 இறுதி வாக்கெடுப்பு இன்று



### மாலை 05 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு இன்று வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சரென்ற வகையில் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை கடந்த நவம்பர் மாதம் 14 ஆம் திகதி சபையில் சமர்ப்பித்து வரவு செலவுத் திட்டம் மீதான உரையை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம்

04

### சர்வதேச சந்தையுடனான கொடுக்கல் வாங்கல்;

## டொலர் நெருக்கடிக்கு தீர்வு காணப்படாவிட்டால் சிக்கல்



### எப்படியாவது டொலரை தேடுவது அவசியம் – அமைச்சர் பந்துல

சர்வதேச சந்தையுடன் இலங்கை கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவதற்கு முதலில் டொலர் நெருக்கடிக்கு தீர்வு காணப்பட வேண்டும். இல்லையேல்

04

## பெரும்போகத்துக்கு தேவையான MOP உரம் நாட்டை வந்தடைவு

### கனடாவிலிருந்து 40 மில்.டொ செலவில் கொள்வனவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

### விவசாய அமைச்சரிடம் கையளிப்பு

நாட்டின் பெரும்போக நெற்பயிர்ச்செய்கைக்கு தேவையான MOP – Muriate of Potash உரம் முழுமையாக நாட்டுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. கனடாவிலிருந்து இந்த உரம் 40 மில்லியன் டொலர் செலவில் இறக்குமதிசெய்யப்பட்டுள்ளது. அதற்கிணங்க 41,876 மெற்றிக் தொன் உரம் நீர்ப்பாசன மற்றும் மஹாவலி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் யு.டி.சி. ஜயலாலினால் விவசாய அபிவிருத்தி அமைச்சர்

04

### சமஷ்டி அடிப்படையிலான TNA யின் அரசியல் தீர்வு முயற்சி;

# முஸ்லிம் கட்சிகளுடனான பேச்சு மூடு மந்திரமாக இருக்கக்கூடாது

### பகிரங்கமாக பேசப்படவேண்டுமென அமைச்சர் நஸீர் வலியுறுத்து




சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வுக்கு முஸ்லிம் கட்சிகளையும் அழைத்துள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பு, அந்தப் பேச்சுக்களை மூடிய அறைக்குள் நடத்தாமல் பகிரங்கத்தளத்தில் பேச வேண்டுமென, சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்கு முஸ்லிம் கட்சிகள் மற்றும் மலையக கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளமை வரவேற்கத்தக்கதெனவும் தெரிவித்துள்ள அவர், அது தொடர்பில் அறிக்கையொன்றையும் விடுத்துள்ளார்.

ஊடக அறிக்கையில் அமைச்சர் நஸீர் அஹமட் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நீண்டகால அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு கிடைப்பது வரவேற்கத்தக்கது. இப்பிரச்சினையால்,வடக்கு,கிழக்கு மாகாணங்களில் வாழும், தமிழ் பேசும் சமூகங்களே அதிகம் பாதிக்கப்பட்டன. எல்லோருக்கும் பொதுவான பிரச்சினை என்பதால் தான், திருமலைத் தீர்மானம், வட்டுக்கோட்டை தீர்மானங்களில் அப்போதைய தமிழ் தலைமைகள் முஸ்லிம்களின் அபிலாஷைகளையும் அங்கீகரித்துச் செயற்பட்டன.

04



இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, இந்திய நிதி அமைச்சர் ஸ்ரீமதி. நிர்மலா சீதாராமனை நேற்று முன்தினம் (06) புதுடெல்லியில் சந்தித்தார். இச்சந்திப்பின் போது நாணய நிதியத்துடனான இலங்கையின் தற்போதைய கலந்துரையாடல்கள் மற்றும் நாட்டின் கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் தற்போதைய நிலை குறித்தும் அமைச்சர் சீதாராமனிடம் மிலிந்த மொரகொட விளக்கினார்.



யால வனவிலங்கு சரணாலயத்தில் 72 இலட்சத்துக்கு மேல் வருமானம் 02

## அடுத்த வருட முற்பகுதியில் Gas விலை குறைவடையும்

### லிற்றோ நிறுவன தலைவர் முதித்த



உலக சந்தையில் நிலவும் விலைகளுக்ேற்ப அடுத்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் சமையல் எரிவாயு கொள்கலன்களின் விலை குறைவடையக்கூடுமென லிற்றோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் சமையல்

04

### பெற்றோர் போதைக்கு அடிமை;

## 12,000 குழந்தைகள் அனாதை இல்லங்களில் வாழ்க்கை

### குழந்தை மன நல மருத்துவர் தீபால் பெரேரா



பெற்றோர் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களென்பதால் இலங்கையில் சுமார் 12,000 குழந்தைகள் தற்போது அனாதை இல்லங்களில் கைவிடப்படுவதாக

04

### வெளிநாடுகளிலிருந்து இலங்கை வரும்

## பயணிகளுக்கான கொவிட் கட்டுப்பாடுகளில் தளர்வு

### நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது



வெளிநாட்டிலிருந்து இலங்கை வரும் பயணிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த கொவிட்19 விதிமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி,

04

### காகித பயன்பாட்டுக்கு முற்று

## ஜனவரி முதல் புதிய முறையில் மின் பட்டியல்

### அறிமுகப்படுத்த அமைச்சர் தீர்மானம்



மின்சார சபையின் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் ஜனவரி முதல் காகிதமல்லா மின்பட்டியல் மற்றும் பற்றுசீட்டு முறைமையை அறிமுகப்படுத்த தீர்மானித்துள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார். நாடு முழுவதுமுள்ள

04

### நாட்டை விட்டு வெளியேறுவோர் தொகை அதிகரிப்பு;

## கடந்த பத்து மாதங்களில் சுமார் 2,50,000 பேர் வெளிநாட்டுக்கு



2022 ஜனவரி மாதம் முதல் ஒக்டோபர் வரையான காலப்பகுதியில் இலங்கையிலிருந்து சுமார் 2,51,151 பேர் வேலை வாய்ப்புகளுக்காக வெளிநாடு சென்றுள்ளதாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. கொரோனா தொற்று ஆரம்பமாவதற்கு முன்னர்

04

### பால் உற்பத்தியில் தன்னிறைவு காண

## அரச மற்றும் தனியார் துறை பிரதிநிதிகள் அடங்கிய குழு

### இந்தியா தொழில்நுட்ப உதவி பெறவும் திட்டம்



இறக்குமதி செய்யப்படும் பால் மாவில் மட்டும் தங்கியிருப்பதை தவிர்க்கும் வகையில் உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அவசியமான குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால

04

### முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவுடன் 50 ஆண்டு அரசியல் பயணம்

## செயற்பாட்டாளர்கள் கௌரவிக்கும் நிகழ்வு



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் 50 வருடத்திற்கும் அதிக காலம் அரசியலில் ஈடுபட்ட அரசியல் செயற்பாட்டாளர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வொன்று ஹம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

நிகழ்வின் சிறப்பம்சமாக ஹம்பாந்தோட்டைமாவட்ட

04



12 ஆம் திகதி முதல் வாரத்தில் 04 நாட்கள்
யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவை ஆரம்பம் 02




சப்புகஸ்கந்த நிலையத்தின் செயற்பாடு 15 முதல் மீண்டும் 02
மின்சக்தி,எரிசக்தி அமைச்சு திட்டம்



மாளிகாவத்தையில்
ஒருவர் அடித்துக் கொலை சந்தேக நபர் தலைமறைவு 02

## டிக்கட் இன்றி பயணம் மூன்று மணி நேரத்தில் ரூ. 3,78,000 வசூல்

### 124 பேர் கைதாகி விடுதலை



கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் நேற்று முன்தினம் 06 ஆம் திகதி காலை 06.30 மணி முதல் காலை 10.00 மணி வரை நடத்தப்பட்ட விசேட பயணச்சீட்டு

04

### பூஸா சிறைச்சாலையிலுள்ள

## கைதிகளிடமிருந்து ஐந்து கைபேசிகள் மீட்பு



### சிம் காட், சார்ஜர்களும் கண்டுபிடிப்பு

கடுழிய சிறைத் தண்டனைக்குட்பட்டவர்களை வைத்துள்ள பூஸா உயர்பாதுகாப்பு சிறைச்சாலைக்குள்ளிருந்து ஐந்து கையடக்க தொலைபேசிகள், சார்ஜர்கள் மற்றும் ஐந்து சிம்கார்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. சிறைச்சாலை அத்தியட்சகருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், சிறைச்சாலையின் விசேட பிரிவின் நுழைவாயிலுக்கு அருகாமையில் பூமிக்கு அடியில் புதைத்து வைத்துள்ள

04

### NHDAக்கு சொந்தமான காணிகளின் தரவுகளை திரட்டி

## காணி வங்கி ஒன்றை தயாரிக்க பணிப்புரை



### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அதிரடி


**லோரன்ஸ் செல்வநாயகம்**

நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான நாடு முழுவதுமுள்ள வர்த்தக பெறுமதி வாய்ந்த 18,000 ஏக்கர் காணிகள் தொடர்பான விபரங்களைத் திரட்டி காணி வங்கி ஒன்றை ஏற்படுத்துமாறு அமைச்சர்

04

## ரயில் பயணச் சீட்டை பெற விரைவில் புதிய வேலைத்திட்டம்

### வரிசையில் காத்திருப்புக்கு முடிவு வருகிறது



நீண்ட வரிசைகளில் காத்திருக்காது ரயில் பயணச்சீட்டுகளை பெற்றுக்கொள்ளக் கூடிய புதிய வேலைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த செயற்றிட்டம் சீன நிறுவனமொன்றினால் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய திட்டத்தின் கீழ் 03 பிரதான வழிமுறைகளினூடாக

04

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN

2022 டிசம்பர் 8 வியாழக்கிழமை

**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.49 |
| லுஹர் | 12.04 |
| அஸர் | 03.25 |
| மஃரிப் | 05.55 |
| இஷா | 07.09 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் கார்த்திகை 22

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

2 சொகுசு கப்பல்களில் வருகை தந்த வெளிநாட்டவர்களால்:

# யால வனவிலங்கு சரணாலயத்திற்கு 72 இலட்சத்துக்கு மேல் வருமானம்



**லோரன்ஸ் செல்வநாயகம், ஹம்பாந்தோட்டை தினகரன் நிருபர்**

ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு அண்மையில் வருகைதந்த அதிசொகுசு கப்பல்களில் வந்திருந்த வெளிநாட்டவர்களால் யால வனவிலங்கு சரணாலயத்திற்கு 72 இலட்சத்து 1,541 ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக தேசிய பூங்காக்கள் மற்றும் வன ஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இரண்டு கப்பல்களில் 551 வெளிநாட்டவர்கள் அண்மையில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்ததுடன் முதலாவது கப்பலில் வந்தவர்கள் 110 வாகனங்கள் மூலம் யால வனவிலங்கு சரணாலயத்திற்கு பயணம் செய்துள்ளனர். அவர்கள் அந்த சரணாலயத்தை அன்றைய தினம் பார்வையிட்டதன் மூலம் 62,19,560 ரூபா அந்த சரணாலயத்திற்கு வருமானமாக கிடைத்துள்ளதாகவும் மேற்படி அமைச்சு

04



உந்துவப் நோன்மதி தினமான நேற்று அலரி மாளிகையில் 'தர்மதீபனீ' சமய உரை நடைபெற்றது. ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் நடைபெறும் சமய உரையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்ட அனைவரும் கலந்துகொள்வர். இம்முறை நடைபெற்ற தர்ம உரையை செவிமடுக்க அறநெறி பாடசாலை பிள்ளைகளும் வருகைத ந்திருந்தனர். அவர்களுடன் பிரதமர் தினேஷ் குணவர்தன சுமுகமாக கலந்துரையாடியபோது பிடிக்கப்பட்ட படம்.

12 ஆம் திகதி முதல் வாரத்தில் 04 நாட்கள்

# யாழ்ப்பாணம் – சென்னை விமான சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், பலாலி சர்வதேச விமான நிலையத்திலிருந்து சென்னைக்கான விமான சேவை 12ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக விமான சேவைகள் அதிகார சபை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், பலாலி விமான நிலையத்திலிருந்து சென்னைக்கு வாரத்துக்கு நான்கு விமான சேவைகள் நடத்தப்படவுள்ளன.

அதேபோன்று சென்னையிலி



ருந்து யாழ்ப்பாணத்துக்கு வாரத்தில் 04 நாட்கள் சேவை நடைபெறுமென விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் உபுல் தர்மதாச தெரிவித்துள்ளார்.

சென்னையிலிருந்து

04

ஐக்கிய நாடுகள் அமைதிப் படைக்காக:

# இலங்கையிலிருந்து 109 விமானப் படையினர் மத்திய ஆபிரிக்கா பயணம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மத்திய ஆபிரிக்காவுக்கு ஐக்கிய நாடுகள் அமைதிப் படையில் பணிபுரிவதற்காக 109 விமானப் படையினர் இலங்கையிலிருந்து அனுப்பப்பட்டுள்ளனர்.

அவர்கள் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தின் மூலம் மத்திய ஆபிரிக்க நாடுகளுக்கு பயணித்துள்ளதாகவும் அவர்கள் விமானப் படையின் 34 வது ஹெலிகொப்டர் படையணியை சேர்ந்தவர்களென்றும் விமானப் படை தலைமையகம் தெரிவித்துள்ளது.

இலங்கையிலிருந்து நேற்று பயணித்துள்ள அவர்கள், அந்த நாடுகளில் படையினரின் போக்குவரத்து பிரபுக்களின் போக்குவரத்து உணவு உட்பட பொருட்கள் போக்குவரத்து உள்ளக

04

மாளிகாவத்தையில்

# ஒருவர் அடித்துக் கொலை சந்தேக நபர் தலைமறைவு

மாளிகாவத்தை ஜயந்த வீரசேக்கர மாவத்தை பகுதியில் (06) நபரொருவர் இரும்புக் குழாய்களால் தாக்கி கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



இத் தாக்குதலில் படுகாயமடைந்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் அதற்கு முன்னதாகவே அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாளிகாவத்தையைச் சேர்ந்த 44 வயதுடைய நபரொருவரே சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளார்.

நீண்ட நாட்களாக நிலவி வந்த தகராறு காரணமாக இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. கொலையுடன்

04

சிறுநீரக வர்த்தகத்துடன் தொடர்புடைய

# 06 தனியார் வைத்தியசாலை பணிப்பாளர்களுக்கு நீதிமன்றத்தினால் வெளிநாட்டு பயணத்தடை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு மேலதிக மஜிஸ்திரேட் நீதவான் உத்தரவு

சிறுநீரக வர்த்தகத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் ஆறு பேருக்கு நீதிமன்றத்தினால் வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தகத்துடன் சம்பந்தப்பட்ட பொரளை பிரதேசத்தைச் சேர்ந்த தனியார் வைத்தியசாலையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் ஆறுபேருக்கே நீதிமன்றம் வெளிநாட்டுத் தடையை விதித்துள்ளதுடன் அதுதொடர்பில் நீதிமன்றத்தில் குடிவரவு குடியல்வு



கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கு விசாரணையிலிருந்து தப்பிப்பதற்காக அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லலாம் என நீதிமன்றத்திற்கு அறிவித்து அவர்களுக்கு வெ ளிநாட்டு பயணத்தடையை விதிப்பதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு விசாரணையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் நீதிமன்றத்தை கேட்டுக்கொண்டுள்ளனர். அதற்கிணங்கவே மேற்படி ஆறு பேருக்கும் நீதிமன்றத்தினால் வெளிநாட்டு

04

அடுத்த வருடத்தில் மருந்து தட்டுப்பாடு நீங்கும்;

# பல்வேறு தரப்பிலிருந்தும் கொள்வனவுக்கான நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நட்டில் தற்போது நிலவும் மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அடுத்த வருடத்தில் சுகாதார கட்டமைப்புக்கு தேவையான மருந்துகளை தட்டுப்பாடின்றி வழங்க முடியுமென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

குறுகியகால, நீண்டகால மற்றும் மத்திய கால வேலைத்திட்டங்கள் பல முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கிணங்க பல்வேறு பிரிவுகள் மூலமும் தேவையான மருந்துகளை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும்அமைச்சு தெரிவித்துள்ளது.

**சுகாதார அமைச்சு தெரிவிப்பு**

அதுதொடர்பில் அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் சமன் ரத்நாயக்க தெரிவிக்கையில், நாட்டில் தற்போது 14 உயிர் பாதுகாப்பு மருந்தும் கையிருப்பிலுள்ளன. அதேபோன்று 683 அத்தியாவசிய மருந்துப் பொருட்களில் 151 மருந்துகளுக்கான தட்டுப்பாடு சுகாதார விநியோக பிரிவில் காணப்படுவதுடன்

04






# கொரோனா பாதிப்பால் ஞாபகமறதி அதிகரிக்கும்

**ஆய்வொன்றில் அதிர்ச்சித் தகவல்**

கொரோனா வைரஸ் சுவாச மண்டலங்களை வெகுவாகப் பாதித்ததென்பது பரவலாகவே அறியப்பட்ட தகவலென்றாலும் அது மனிதனின் அறிவாற்றல் செயற்பாட்டையும் பாதித்துள்ளதாக புதிய தகவல்கள் தெரிவித்துள்ளன. கொரோனா பாதித்த பலருக்கும் மூளையின் செயற்பாட்டில் ஒரு மந்தம் அல்லது சுணக்க நிலை இருப்பது தொடர்ந்து பதிவாகி வருகிறது. அதாவது, ஒரு தகவலை நினைவில் வைப்பது, ஒரு செயற்பாட்டில் கவனம் செலுத்துவது, தினந்தோறும் செய்யும்



வேலைகளை நினைவூட்டுதல் போன்றவற்றில் சிக்கல்களிருந்தது பல தரப்பிலிருந்தும் கூறப்பட்டு வருகிறது

நீண்ட அல்லது கடுமையாக கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பிரெய்ன் ஃபோக் எனப்படும் மூளை மந்த நிலை காணப்படுகிறது. ஒரு சிலருக்கு மாதக்கணக்கிலும் சிலருக்கு வருடக் கணக்கிலும் இந்த பாதிப்புள்ளது.

அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வில், கொரோனா வைரஸ் மூளையின் அறிவாற்றல் செயற்பாட்டை பாதித்திருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அதுவும் 25 மற்றும் அதற்கும் மேற்பட்ட வயதினருக்குத்தான் அதிக பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளதென்று ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

அதே ஆய்வில், காலப்போக்கில் நிச்சயம் இந்த குறைபாடு சரிசெய்யப்படும் என்றாலும், அறிவாற்றல் செயல்பாட்டில் முழுமையாக இந்த பாதிப்பு மேம்படுமா? என்பது சந்தேகத்துக்குரியதாகவே இருப்பதாகவும்


04



வெள்ளம்பிடிய கொத்தொட்டுவ "BUSY BEE" (பிஸீ பீ) பாலர் பாடசாலை ஏற்பாட்டில் வருடாந்த கலை நிகழ்ச்சி கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற போது பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் மாணவ மாணவிகளுக்கான விருதுகளை வழங்கி வைப்பதையும் நிலையத்தின் அதிபர் சுஹாரா இன்ஹாம் (TALENT HUB) டெலன்ட் ஹப், நிறுவனத்தின் பணிப்பாளர் பஸ்லியா ரமீஸ் ஆகியோர் உடன் காணப்படுகிறார்கள். (படம்:ருசைக் பாரூக்)

# சப்புகஸ்கந்த நிலையத்தின் செயற்பாடு 15 முதல் மீண்டும்

**மின்சக்தி, எரிசக்தி அமைச்சு திட்டம்**



சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாடுகளை எதிர்வரும் 15ஆம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிப்பதற்கு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

மசகு எண்ணெய் ஏற்றிய இரண்டு கப்பல்கள் நாட்டை வந்தடைந்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது. அதற்கமைய, 02 இலட்சம் மெற்றிக் தொன் மசகு எண்ணெய் நாட்டுக்கு கிடைத்துள்ளது.

மசகு எண்ணெய் அடங்கிய மற்றுமொரு கப்பல் இன்னும் சில தினங்களில் நாட்டை வந்தடையுமென மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்தது.


**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 231.31 | 242.45 |
| கனடியன் டொலர் | 265.08 | 277.22 |
| யூரோ | 358.78 | 373.86 |
| ஜப்பான் யென் | 2.4417 | 2.5454 |
| சிங்கப்பூர் டொலர் | 255.60 | 266.39 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 412.93 | 429.30 |
| சுவிஸ் பிராங்க் | 360.91 | 378.36 |
| அமெரிக்க டொலர் | 360.88 | 371.68 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 964.12 | கட்டார் ரியால் | 99.42 |
| குவைத் டினார் | 1,174.43 | சவூதி ரியால் | 96.73 |
| ஓமான் ரியால் | 944.10 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.96 |

# அந்நியச்செலாவணியை பெருமளவு ஈட்டித்தரும் அலங்கார மீன் உற்பத்தியை ஊக்குவிக்க திட்டம்

## வட மத்திய மாகாண ஆளுநர் தலைமையில் திட்டம் வகுப்பு



**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

நாட்டுக்கு அந்நியச் செலாவணியை பெருமளவு ஈட்டித்தெரும் அலங்கார மீன் உற்பத்தியையும் அதனை மேற்கொள்ளும் உற்பத்தியாளர்களையும் ஊக்குவிக்கும் செயற்திட்டமொன்றை வட மத்திய மாகாண சபை ஆரம்பித்துள்ளது.

வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத்தின் எண்ணக்கருவிற்கமைய அலங்கார மீன் உற்பத்தியை அதிகரிக்கும் செயற்திட்டம் வடமத்திய மாகாண விவசாய மற்றும் மீன்பிடி அமைச்சின் ஏற்பாட்டில் ஆளுநர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களைச் சேர்ந்த 450 அலங்கார மீன் உற்பத்தியாளர்கள் மற்றும் அலங்கார மீன் ஏற்றுமதியாளர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் பொலன்னறுவை சந்திர மண்டபத்தில் நடைபெற்றது.

இங்கு அலங்கார மீன் உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களிடையே மிக நீண்ட நேர கலந்துரையாடல் நடைபெற்றது. வெளிநாட்டில் அதிக கேள்வியாகவுள்ள மீன் வகையினை அதிகளவில் ஏற்றுமதி செய்யக்கூடிய மீன் வகை தொடர்பில் ஏற்றுமதியாளர்கள் மூலம் உற்பத்தியாளர்களுக்கு விளக்கமூட்டப்பட்டன. அலங்கார மீன் ஏற்றுமதி மூலம் ஆண்டுக்கு சுமார் 14 மில்லியன் டொலர்கள் இலாபமாக இலங்கைக்கு கிடைப்பதுடன் அது உலக அலங்கார மீன் தேவையில் 4 வீதமாகும். இதனை அதிகரிப்பதன் மூலம் நாட்டிற்கு அதிக அந்நியச் செலாவணி பெருமளவில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் போது மாகாண விவசாய மற்றும் மீன்பிடி அமைச்சின் செயலாளர் ஜீ.டப்ளியு.எஸ்.வனசிங்ஹ பொலன்னறுவை மாவட்ட செயலாளர் டப்ளியு.ஏ.தர்மசிறி மாகாண மீன்பிடி அமைச்சின் பிரதி பணிப்பாளர் கே.பீ. எஸ்.பத்திரன உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

புத்தளத்தில்

# மனித கடத்தல் தொடர்பான ஊடக செயலமர்வு



**புத்தளம் தினகரன், உடப்பு குறூப் நிருபர்கள்**

இலங்கையில் மனித கடத்தலை எதிர்த்து போராடுவதற்கு சிவில் சமூக அமைப்புகளை வலுப்படுத்துதல் தொடர்பாக ஊடகவியலாளர்களை தெளிவு படுத்தும் முழு நாள் செயலமர்வொன்று புத்தளம் இசுரு வரவேற்பு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (06) முழு நாளும் நடைபெற்றது. சேப் பவுண்டேசன் ஸ்ரீலங்கா நிறுவனம் ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் பிரதான வளவாளராக சேப் பவுண்டேசன் ஸ்ரீலங்கா நிறுவன தலைமையகத்தின் இனோஜ் குலதுங்க கலந்து கொண்டார். சேப் பவுண்டேசன் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் பிராந்திய முகாமையாளர் நிராங்க் தஸநாயக, ஊடக அதிகாரி சரத் விஜேமான, திட்டமிடல் அதிகாரிகளான திலினி அசோகுண திலக மற்றும் எம்.என்.எம்.அஸ்னி ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இப்பயிற்சி பட்டறையில் புத்தளம் மாவட்ட ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டனர்.


**பாவிக்கப்பட்ட டக் மற்றும் படகை (BARGE) விற்பனை செய்தல்**

**இலங்கை கனிப்பொருள் மற்றும் மணல் லிமிடெட்**

**கேள்வி ஆவணங்கள் வழங்கும் காலத்தை நீடித்தல்**

2022-12-03ஆம் திகதிய ''தினகரன் மற்றும் தினமின'' பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட விளம்பரம் தொடர்பானது. 2022-12-16ஆம் திகதி முடிவுறுத்தப்படுவதற்கிருந்த இந்த கேள்விப் படிவங்கள் வழங்குதல் 2022-12-22ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக தயவாக அறிவிக்கப்படுகின்றது. விளம்பரத்தின் ஏனைய நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.

மேலதிக தெளிவுபடுத்தல்களுக்கு தயவு செய்து 071 4526793 எனும் தொலைபேசி இலக்கத்தில் அலுவலக நேரத்தினுள் வழங்கல் முகாமையாளரைத் தொடர்புகொள்ளவும்.


# சிலாபம் புனித சவேரியார் தேவாலயத்தில் திருவிழா



**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

சிலாபம் மறை மாவட்டத்திற்குட்பட்ட கட்டைக்காட்டு கிராமத்தில் 160 வருடங்கள் பழமை வாய்ந்த புனித சவேரியார் தேவலாயத்தின் வருடாந்த திருவிழாவும் திருப்பலி பூஜையும் சனிக்கிழமை (03) வெகு விமர்சையாக நடைபெற்றது.

பங்குத் தந்தை அருட் பணி. வின்சன் ஜெயராசா அடிகளார் தலைமையில் காலை 8.00 மணியளவில் திருவிழாவும் திருப்பலியும் நடைபெற்றது.

கடந்த நவம்பர் மாதம் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 08 நாட்கள் நவநாள் ஆராதனைகள் இடம் பெற்று வந்த நிலையில் கடந்த 02 ஆம் திகதி மாலை ஆராதனை இடம்பெற்றது. பின்னர் பங்குத் தந்தை அருட் பணி. வின்சன் ஜெயராசா அடிகளார் தலைமையில் நடை பெற்ற திருவிழா திருப்பலிப் பூஜையை அமலமரிய தியாகிகள் சபையின் அருட் பணி அமீர்த்தராஜ் அடிகளினாரினால் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இறுதியில் புனித சவேரியாரின் திரு சுரூப பவனி உள்வீதி வலம் வந்ததுடன் ஆசீர்வாதமும் இடம் பெற்றது. திருவிழா திருப்பலி பூஜையில் ஆயிரத்திற்கு மேற்பட்ட அடிகளார் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.





சீனன்கோட்டை வாலிபர் ஹழரா ஜெமாஅத் ஏற்பாட்டில் நடைபெற்ற மீலாத் தின போட்டியில் 3ஆம் இடம்பெற்ற கங்கானங்கொடைமத்ரஸதுந்நூராணிய்யா மத்ரஸாவின் மாணவர்களின் மீலாத் தின நிகழ்ச்சிகள் அண்மையில் மத்ரஸா மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது நடைபெற்ற நிகழ்வில் பிரதம பேச்சாளர், மத்ரஸா அதிபர் ஆகியோர் உரையாற்றுவதையும் கலந்து கொண்ட பள்ளிச்சங்க நிர்வாகிகளுடன் பரிசுபெற்ற மாணவர்கள் கூட்டாக எடுத்துக்கொண்ட படம்.





அநுராதபுரம் கல்வி வலயத்திலுள்ள அளுத்கம தாருஸ்ஸலாம் முஸ்லிம் வித்தியாலய ஆரம்ப பிரிவு பாடசாலையில் மாணவ தலைவர்களையும் ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு வித்தியாலய அதிபர் நசீம் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது நிகழ்வுக்கு வருகை தந்த அதிதிகளை மலர் கொத்து வழங்கி வரவேற்பதையும் ஆசிரியர்களுக்கு நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிப்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: அநுராதபுரம் தினகரன் நிருபர்)


**SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA**

**VACANCY**

**POST OF ASSISTANT INTERNAL AUDITOR**

**(ON CONTRACT - SECONDMENT BASIS)**

Applications are invited from suitably qualified persons for the above post till 22.12.2022.

For further details, please visit the website : **www.seu.ac.lk**

**Registrar**
**South Eastern University of Sri Lanka**
**P.O. Box 01, University Park, Oluvil #32280**
**Sri Lanka**

08.12.2022



**வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு**

**தேசிய மிருகக் காட்சிச் சாலைத் திணைக்களம்**

**வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2023**

**DNZG/A/10/22/12**

1. தேசிய மிருகக்காட்சிசாலைத் திணைக்களத்திற்கு, அதன் தெஹிவளை மிருகக்காட்சிசாலை, பின்னவல யானைகள் சரணாலயம், பின்னவல மிருகக்காட்சிசாலை மற்றும் ரிதியகம சபாரி பூங்காவிற்கு 2023ஆம் ஆண்டிற்காக கீழ்க்காணும் பொருட்கள் மற்றம் சேவைகளுக்காக பதிவு செய்வதற்கு ஆர்வம் காட்டுகின்ற அரச திணைக்களங்கள், அரசிற்கு சொந்தமான வர்த்தக நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், பிரபல வழங்குநர்கள், உள்ளூர் முகவர்கள், உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பொருட்கள் அல்லது சேவை வகுதிகள் பலவற்றிற்காக பதிவு செய்வதற்கு ஒவ்வொரு வகுதிக்கும் வேறு வேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். இவ் விண்ணப்பங்களை உள்ளிட்டு அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

3. சகல வகுதிக்கும் மீளளிக்கப்படாத ரூ. 500/- தொகை அறவிடப்படும் இக்கொடுப்பனவு காசாக மேற்கொள்ளப்படல் வேண்டும். காசாளரிடம் காசு செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**1. வகுதிகள்**

| இலக்கம் | பல்வகைப்படுத்தல் | விபரம் | தேவைப்படும் இடம் |
|---|---|---|---|
| 01. | மருத்துவ வழங்கல்கள் | மருந்து ஔடதம், ஔடதம், முதலுதவி வழங்கல், கருவிகள், கண்ணாடிப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள் மற்றும் வேறு கருவிகள் | தெஹிவளை மிருகக் காட்சிச்சாலை, பின்னவல யானைகள் சரணாலயம். பின்னவல மிருகக்காட்சிசாலை, ஹம்பந்தோட்டை சபாரி பூங்கா |
| 02. | வாகனங்களை வாடகைக்குப் பெறல் (பஸ்) | ஆசன கொள்ளளவு 20 -36 இற்கு இடையில், வளிச்சீராக்கப்பட்ட பஸ்கள் | ஹம்பாந்தோட்டை சபாரி பூங்கா |

4. விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களை இணைத்து அனுப்புதல் வேண்டும்.
   a. உள்ளூர் முகவர்கள் பற்றிய உற்பத்தியாளர்களிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட அதிகார சபை அதிகாரம்
   b. பஸ்களின் பதிவுச் சான்றிதழ்

5. 2023ஆம் ஆண்டிற்காக பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் குறைந்தபட்சம் 30 நாள் கடன் கால எல்லையை வழங்குவதற்கு இணங்குதல் வேண்டும். அந்த குறைந்தபட்ச கடன் கால எல்லையை வழங்குவதற்கு இணங்காத அல்லது காசாளரிடம் காசு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு மற்றும் மேலே குறிப்பிடப்படும் சான்றிதழ் பத்திரங்கள் இல்லாது அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எந்த அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

6. வழங்குநர்கள் இதற்கு முன்பு திணைக்களத்தில் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம் பெறாது இருத்தல் வேண்டும்.

7. குறித்த விண்ணப்பங்கள் மற்றும் மேலதிக விபரங்களை கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். தொ.பே. இல. 0112710807 குறித்த இடங்களுக்கு அருகில் செயற்படும் வழங்குநர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்வதற்காக விண்ணப்பிப்பதற்காக ஆர்வமூட்டப்படுகின்றனர்.

8. விண்ணப்பங்களை கொண்டு வந்து ஒப்படைத்தல் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல், திணைக்களத்தின் தலைமையகத்திற்கு 2022 டிசம்பர் 30 பிற்பகல் 3.00 இற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய மீருகக்காட்சிசாலைத் திணைக்களம்,**
**அநகரிக்க தர்மபால மாவத்த,**
**தெஹிவளை.**



afc

தங்கக் கடன் சேவை
தங்க நகை ஏல விற்பனை

எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி உடன் கீழேயுள்ள நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 30.09.2022 வரை மீட்கப்படாத ஆபரணங்கள் 22.12.2022 முற்பகல் 9.30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தங்கக் கடன் சேவை நிலையங்கள்**

அழுத்கம, அனுராதபுரம், அத்துருகிரிய, அவிசாவளை, மட்டக்களப்பு, சங்கானை, சாவகச்சேரி, சிலாபம், சுன்னாகம், கலேவெல, ஹொரண, ஜா-எல, யாழ்ப்பாணம், கதுருவெல, கடுவெல, கல்பிட்டி, தம்புள்ளை, கிளிநொச்சி, கடவத்தை, களனி, நீர்கொழும்பு, மொனராகலை, மாத்தறை, ஹோமாகம, மாலபே, ஹட்டன், பலாங்கொடை, பதுளை, பாணந்துறை, பிலியந்தலை, பருத்தித்துறை, இரத்தினபுரி, ரிகில்லகஸ்கட, திருகோணமலை, திருநெல்வேலி வவுனியா, அம்பாறை, பூகொட, அம்பலங்கொட, நிட்டம்புவ, கிரிபத்கொட, கிரிந்திவெள, வெலிமடை, நாவலபிட்டி, ராகல, தெஹியத்தகண்டி, கல்கமுவ, களுத்துறை, கேகாலை, குருணாகல், வெல்லவாய, ராஜகிரிய, கோஹுவலை, நுவரெலியா, நிக்கவரெட்டியா, மாத்தளை, மதவாச்சிய, ஹிங்குரககோட, எம்பிலிபிட்டியா, அம்பாந்தோட்டை, புதுக்குடியிருப்பு, அக்குரஸ்ஸா, கிளிநொச்சி, கிரிபத்கொடை, மாலபே, மன்னார, காலி, புத்தளம், வோட் இடம், மஹியங்கனை, வென்னப்புவ, மஹரகம, உடப்புவ, கம்பளை, தெனியாய, குளியாப்பிட்டி, பராக்கிரமபுரம், தலவாக்கலை, பசறை, கணேமுல்ல, குருமன்காடு, திருகோணமலை - 2, கம்பஹா.

**ஏல விற்பனை இடம் பெறும் நிலையம் மற்றும் திகதி:**
**722, கோட்டை வீதி இராஜகிரிய**
**22.12.2022**

ஏலவிற்பனைக்காக வருகை தரும் அனைவரும் தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வித அறிவித்தலுமின்றி ஏல விற்பனையை இரத்துச் செய்தல், பிற்போடல் மற்றும், இணைப்பதற்கான உரிமையை எலயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சி கொண்டுள்ளது.

65 1956 இல் இருந்து
எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பி.எல்.சி
சௌபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

அடகுச் சேவைத் தலைவர்
எலாயன்ஸ் பினான்ஸ் பி.எல்.சீ
722, கோட்டை வீதி இராஜகிரிய
தொலை : 0115 573600



திகதி 06.12.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4961
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.10,117,990.00
ஆங்கில எழுத்து H வெற்றி இலக்கங்கள் 3 2 3 3 8 6
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.16,087,526.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1416
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,072,620.00
வெற்றி இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 1 9 3 4 6 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,714,071.60

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3203
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,472,280.00
ஆங்கில எழுத்து E வெற்றி இலக்கங்கள் 30 39 47 51
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 61,284,964.00

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 270
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,675,400.00
இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 12 17 23 35 விசேட இலக்கினம் தனுசு
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,575,213.80

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 991
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,610,520.00
வெற்றி இலக்கினம் J வெற்றி இலக்கங்கள் 04 33 37 59
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 135,643,971.20

கோடி 28+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1309
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,560,160.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.285,024,398.00
A 26 02 07 08 68
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

## பல்வேறு தரப்பிலிருந்தும்... 02ஆம் பக்க தொடர்...

ஆஸ்பத்திரிகளில் அது 22%மாக குறைவடைந்துள்ளது.

இந்த 14 உயிர் பாதுகாப்பு மருந்துகளில் 2 மருந்துகள் உள்நாட்டில் தயாரிக்கப்படுகின்றன. அத்துடன் வெளிநாட்டில் உற்பத்திசெய்யப்படும் மருந்துகளில் பெரும்பாலானவை தட்டுப்பாடின்றி ஆஸ்பத்திரிகள் மற்றும் கிளினிக்குகளில் கையிருப்பிலுள்ளதுடன் தொற்றா நோய்கள், இருதய நோய், நீரிழிவு நோய், உயிர் இரத்த அழுத்தம் மற்றும் கர்ப்பிணித்தாய்மாருக்கான விற்றமின் மருந்துகள் அதில் உள்ளடங்குகின்றன.

உயிர்ப்பாதுகாப்பு மருந்து மற்றும் அத்தியாவசிய மருந்துகளை போதுமானளவில் களஞ்சியப்படுத்துவதே எமது நோக்கம். எந்தக்காலத்திலும் 100% மருந்துகள் கையிருப்பிலிருந்ததில்லை. எவ்வாறாயினும் 15க்கும் 25 க்குமிடைப்பட்ட மருந்துகளுக்கான பற்றாக்குறை தொடர்ந்தும் நிலவிவந்துள்ளது. தற்போது நாட்டில் அந்நியசெலாவணி நெருக்கடி காணப்படுவதால் இந்தப்பிரச்சினை உருவெடுத்துள்ளது. அதற்காகவே அரசாங்கம் அதற்காக கடன் திட்ட முறைமையொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

அந்தவகையில் இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் 200 மில்லியன் அமெ. டொலரும் ஆசிய கடன் திட்டத்தின் கீழ் 66.6 மில்லியன் அமெ. டொலரும் உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் 22 மில்லியன் அமெ. டொலரும் ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு வங்கியின் 100 மில்லியன் அமெ. டொலரும் மருந்துகளை கொள்வனவு செய்வதற்கான நிதியுதவியாக கிடைத்துள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## யால வனவிலங்கு... 02ஆம் பக்க தொடர்...

தெரிவித்துள்ளது. அந்தவகையில், கடந்த 30 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகைதந்த அதிசொகுசு கப்பலில் 551 வெளிநாட்டவர்களும் டிசம்பர் 05 ஆம் திகதி வருகை தந்த கப்பலில் 86 பேரும் யால சரணாலயத்தை பார்வையிட சென்றுள்ளனர். அதற்கிணங்க முதல்கட்டமாக 110 வாகனங்களில் சென்றிருந்த வெளிநாட்டவர்கள் மூலம் 62,19,560 ரூபா வருமானமும் இரண்டாவது தடவையாக அங்கு சென்றுள்ள 86 வெளிநாட்டவர்கள் மூலம் 9,81,981 ரூபாவும் வருமானமாகக் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வெளிநாட்டவர்களின் இலங்கை விஜயம் மூலம் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு வரலாற்றில் முதல் தடவையாக பாரிய வருமானம் கிடைத்துள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

## கைதிகளிடமிருந்து... (தொடர்)

நிலையில் இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பூஸா சிறைச்சாலை அத்தியட்சகர் உள்ளிட்ட அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## செயற்பாட்டாளர்கள்... (தொடர்)

அரசியல் செயற்பாட்டாளர்களை பாராட்டி கௌரவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு எதிர்வரும் ஜனவரி மாதம் 14ஆம் திகதி தங்காலையிலுள்ள கால்டன் ஹோட்டலில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

## அடுத்த வருட முற்பகுதியில் ... (தொடர்)

எரிவாயு கொள்கலன்களின் விலைகள் குறைவடையலாம். இந்த விலைகுறைப்பு உலக சந்தையில் நிலவும் விலைகளுக்கேற்ப முன்னெடுக்கப்படும். தற்போதைய காலக்கட்டத்தில் 12.5 கிலோ நிறை கொண்ட சமையல் எரிவாயுவுக்கான விலையை கணிசமான அளவு அதிகரித்திருக்க வேண்டும்.

எனினும், நுகர்வோர் நலன் கருதி பொறுப்புவாய்ந்த நிறுவனமென்ற வகையில் நட்டத்தையும் ஏற்றுக்கொண்டு 250 ரூபாவால் மாத்திரம் விலையை உயர்த்த தீர்மானித்தாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## கொரோனா பாதிப்பால்... 02ஆம் பக்க தொடர்...

கூறப்படுகிறது.

குறுகிய கால நினைவாற்றல் எனப்படும் செயற்பாட்டுத் திறன், அவ்வப்போது நடக்கும் செயற்பாடுகளை நினைவில் வைத்துக் கொள்வது, ஒரு பிரச்சினை வரும் போது அதனை எவ்வாறு சரி செய்வது என்ற யோசனையை தருவது, படிப்பது, பேசுவது அல்லது விவாதம் செய்யும் போது உடனுக்குடன் செயற்படுவது போன்றவற்றை உள்ளடக்கியது.

எனவே பலவீனமான நினைவாற்றல் செயற்பாடு ஒரு நபரின் அன்றாட வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தவே செய்யும்.

ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்யும் திறன் படைத்தவர்கள் கூட, நீண்ட அல்லது தீவிர கொரோனா பாதிப்புக்குப் பிறகு அந்த திறனை இழந்துவிட்டதாகவே உணர்கிறார்கள் என்று ஆய்வு கூறுகிறது.

பல்வேறு வகையில் மனிதர்களை பரிசோதித்து, அவர்களுக்கு ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்ச்சியாக பதிவு செய்யப்பட்டு, இந்த ஆய்வு மேற கொள்ளப்பட்டுள்ளது. கொரோனாவுக்குப் பிறகு ஏற்பட்ட உடல்நலப் பாதிப்புகள், பொதுவான கேள்வி பதில்கள் என இதில் பல சோதனைகள் அடங்கியிருந்தன. இதில் 5,400 பேர் பங்கேற்றனர்.

பிரிட்டனில், ஹல் பல்கலைக்கழகம், யோர்க் ஹல் பல்கலைக்கழகம் இணைந்து இந்த ஆய்வை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையிலிருந்து 109... 02ஆம் பக்க தொடர்...

விமான சேவைகள் பரசூட் மூலம் பொருட்களை எடுத்துச் செல்லுதல் உள்ளிட்ட பணிகளுக்காக நியமிக்கப்படவுள்ளதாக விமானப் படை தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, மத்திய ஆபிரிக்காவில் இதுவரை காலமும் அமைதிப் படையில் பணியாற்றிய 75 விமானப்படை வீரர்கள் சேவைக்காலத்தை முடித்துக்கொண்டு மீண்டும் நாடு திரும்பியுள்ளதாக அந்த தலைமையகம் தெரிவித்துள்ளது.

## யாழ்ப்பாணம் – சென்னை விமான 02ஆம் பக்க தொடர்...

புறப்படும் விமானம் முற்பகல் 10.50 மணிக்கு பலாலி விமான நிலையத்தை வந்தடைவதற்கும் பலாலி விமான நிலையத்திலிருந்து முற்பகல் 11.50 மணிக்கு மீண்டும் சென்னை நோக்கிய விமான பயணத்தை ஆரம்பிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

## ரயில் பயணச் சீட்டை.... (தொடர்)

பொதுமக்கள் ரயில் பயணச்சீட்டுகளை பெற்றுக்கொள்ள முடியுமென ரயில்வே திணைக்களத்தின் பொது முகாமையாளர் டபிள்யூ.ஏ.எஸ்.ஈ. குணசிங்க தெரிவித்தார். பயணச்சீட்டுகள் இணையத்தளம், தன்னியக்க இயந்திரம் மற்றும் முற்கொடுப்பனவு அட்டை ஆகியவற்றினூடாக வழங்கப்படுமென அவர் மேலும் குறிப்பிட்டார். இத் திட்டத்தை அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## ஜனவரி முதல்... (தொடர்)

இலங்கை மின்சார சபையின் உயரதிகாரி களுடனான இணையவழி சந்திப்பொன்று நடைபெற்றது.

செலவினங்களைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் மின்சாரசபையின் செலவுகளைக் குறைக்க எடுக்கப்படக்கூடிய மேலதிக நடவடிக்கைகள் பற்றி இதன்போது கலந்துரையாடப்பட்டன. இதற்கமைய, காகிதமில்லா மின்பட்டியலை (E Bill) அறிமுகப்படுத்தல் தொடர்பிலும், தெரு விளக்குகளை முறையாக பொருத்துதல் மற்றும் இயக்குவதை ஒழுங்குபடுத்தல் குறித்தும் தீர்மானிக்கப்பட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வெளிச்சேவைகள் மற்றும் இலங்கை மின்சார சபையால் செய்ய முடியாத வேலைகளை உள்ளூராட்சி சபைகளின் ஆதரவுடன் மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## முஸ்லிம் கட்சிகளுடனான...(தொடர்)

முஸ்லிம்களுக்கான தனியான அடையாளத்தை தந்தை செல்வா கூட ஏற்றிருந்தார். இதனால் தான், எமது தலைவர் அஷ்ரஃப் கூட சிறுபான்மை அரசியலுடன் இணங்கிப் பயணித்தார். காலப்போக்கில், இந்த ஒற்றுமைகள் இல்லாமலாகி இரு சமூகங்களும் துருவங்களாகின.

இப்போதுள்ள நிலையில், இச்சமூகங்களை பொது அடையாளத்துக்குள் இணைப்பதற்கான முயற்சிகள் எதையும் சிறுபான்மை தலைமைகள் செய்யவில்லை. இதுதான் இன்றுள்ள கவலை.

இரு சமூகங்களும் அண்ணளவாக சம எண்ணிக்கையிலுள்ள கிழக்கு மாகாணத்தில் கூட, ஒரு இணக்கப்பாட்டுக்கு வர முடியாமலேயே உள்ளது. அதிகாரக் கெடுபிடி, நிர்வாகத் தொந்தரவு உள்ளிட்டவைகளால், மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களுக்கு இன்னும் அநீதியிழைக்கப்படுகிறது.

காணிகளைத் திட்டமிட்டுச் சுருட்டிக் கொள்வது பெரும்பான்மையைப் பலப்படுத்தும் நோக்குடனா? இந்த சந்தேகங்களும் மக்களிடத்தில் எழுகின்றன.

புலிகளின் கோட்பாட்டுச் சிந்தனையில் வளர்ந்த சிலரின், இந்தப் போக்குகள்தான், தமிழ்,முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான புரிந்துணர்வுக்கு குறுக்காக நிற்கின்றன.

இருந்தாலும், இந்தப்போக்குகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பிடமும் அரசியல் பலம் வாய்ந்த புத்தி ஜீவிகளிடமும் இருக்காது என்றே, நம்புகிறோம். இவர்களுடன் பேச நாம் தயாராக இருப்பதும் இந்த நம்பிக்கையில்தான்.

என்றாலும்,2001 இல்,விடப்பட்ட தவறுகள் இம்முறையும் இடம்பெறக்கூடாது. முஸ்லிம்களின் தனித்தரப்பை மறுத்த பேச்சுக்கள் எவையும் வெற்றியளிக்காதென, அன்றே,நாம் அடித்துக் கூறினோம்.

இந்நிலையில் தமிழ், முஸ்லிம் தலைமைகள் நடத்தும் பேச்சுக்கள் எவையும் மூடு மந்திரமாக இருக்கக் கூடாது. வடபுல வெளியேற்றத்தை விரும்பவில்லையெனக்கூறும் தமிழ் தரப்பு, எமது மக்களை மீண்டும் அங்கு குடியேற்ற எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. வடமாகாண சபையின் கடந்த செயற்பாடுகள், இனச் சுத்திகரிப்புக்கு அமைதியான ஆதரவு வழங்குவதாகவே இருந்தன.

ஒரு கல்லையாவது நட்டு, மீள் குடியேற்றத்துக்கு சமிக்கை வழங்கியிருக்கலாம். இவற்றையெல்லாம் முஸ்லிம் தலைமைகள் மறந்திருக்கலாம். முஸ்லிம்கள் மறக்கவில்லை. வாக்குகளுக்காகவும், வெவ்வேறு வாய்ப்புகளுக்காகவும் இந்த முஸ்லிம் தலைமைகள் தலையாட்டிகளாக உள்ளனவேயன்றி, தமிழ் மொழிச் சமூகங்களின் ஒன்றிணைவு அல்லது ஒரே தீர்வுக்கு இவர்கள் உழைக்கவில்லை. என்று அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெரும்போகத்துக்கு...(தொடர்)

மஹிந்த அமரவீரவிடம் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

நீர்ப்பாசன மற்றும் மஹாவலி அமைச்சின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்படும் மஹாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு வேலைத்திட்டத்தின் நிதியை செலவுசெய்து மியுரேற் ஒப் பொட்டேஸ் என்ற இந்த MOP உரத்தை கொள்வனவு செய்வதற்கு விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

எமது நாட்டில் விவசாய பயிர்ச்செய்கைக்காக இரண்டு போகங்களுக்குப் பின்னரே இந்த MOP உரம் பெற்றுக் கொடுக்கப்படுகிறது.2021 ஆம் ஆண்டு பெரும்போகத்திற்கு இரசாயன உரம் தடைசெய்யப்பட்டதையடுத்து 2022 பெரும்போகத்திற்கு பண்டி உரத்தை கொள்வனவு செய்ய முடியாமற் போனது. அதனையடுத்து 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டில் பெரும்போக நெற் பயிர்ச்செய்கை MOP உரத்தை உபயோகிப்பதன் மூலம் நெற் பயிர்ச்செய்கையை சிறந்தமுறையில் முன்னெடுக்க முடியுமென்றும் அதன்மூலம் சிறந்த அறுவடையை பெற்றுக்கொள்ள முடியுமென்றும் விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் நீர்ப்பாசன அமைச்சின் திட்டங்களுக்கான டொலரை செலவுசெய்து விவசாய சமூகத்திற்காக MOP உரம் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ள நீர்ப்பாசன அமைச்சர் ரொஷான் ரணசிங்கவுக்கு அனைத்து விவசாய சமூகங்களும் பாராட்டுக்களைத் தெரிவிக்கவேண்டும் என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

## அரச மற்றும் தனியார்....(தொடர்)

திட்டத்தை தயாரிக்கும் நோக்கில் இந்திய தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் பல்துறை குழுவுடன் இணைந்து செயற்படுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உள்நாட்டின் அரச மற்றும் தனியார் துறை பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளார்.

அது தொடர்பில், இந்திய தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையும் (NDDB) இந்தியாவின் அமுல் பால் நிறுவனமும் இணைந்து இந்நாட்டில் திரவப் பால் உற்பத்திக்கு தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கான ஆரம்பக்கட்டப் பேச்சுவார்த்தை ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையில் அண்மையில் நடைபெற்றது. குறுகிய மற்றும் நடுத்தர கால திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் உள்ளூர் பால் உற்பத்தியை இரட்டிப்பாக்குவது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், நீண்டகால திட்டத்தினூடாக இலங்கையை பாலில் தன்னிறைவடையச் செய்வதே இதன் நோக்கம் என்றும் இங்கு குறிப்பிடப்பட்டது.

விவசாய அமைச்சின் மேலதிகச் செயலாளர் கலாநிதி நிமல் சமரநாயக்க, தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் தலைவர் பேராசிரியர் எச்.டபிள்யூ. சிறில் மற்றும் அமைச்சுக்களின் உயரதிகாரிகளும் இந்திய தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் சிரேஷ்ட பொது முகாமையாளர் ராஜேஷ் ஓங்கர்நாத் குப்தா(Rajesh Onkarnath Gupta), பொது முகாமையாளர் சுனில் சிவ பிரசாத் சின்ஹா(Sunil Shivprasad Sinha), சிரேஷ்ட முகாமையாளர் ராஜேஷ் குமார் சர்மா (Rajesh Kumar Sharma) உள்ளிட்ட அதிகாரிகள் சிலரும் கலந்து கொண்டனர்.

## 12,000 குழந்தைகள்....(தொடர்)

லேடி ரிட்ஜ்வே மருத்துவமனை ஆலோசகர் குழந்தை நல மருத்துவர் டாக்டர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

பெற்றோர் போதைக்கு அடிமையானவர்களென்பதால் பெரும்பாலான குழந்தைகள் தங்கள் பாட்டி அல்லது தாத்தாவுடன் மருத்துவமனைகளுக்கு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை விட பாடசாலை மாணவர்களிடையே போதைப்பொருள் தொடர்பான அனைத்து பழக்கங்களும் மிகவும் ஆபத்தானது, இந்த சூழ்நிலைக்கு எதிராக மக்கள் அனைத்து பிரசாரங்களையும் தொடங்க வேண்டும்.

ஐஸ் போதைப்பொருள் பாடசாலை மாணவர்களிடையேயும் இளம் பராயத்தினர் மத்தியிலும் வேகமாக பரவி வருகிறது. மாணவர் சமுதாயத்தினரிடையே போதைக்கு அடிமையானவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. மாணவர்களை போதைக்கு அடிமையாக்குவது தற்போதைய சூழ்நிலையில் இது ஒரு நவீன போக்காக (ட்ரெண்டிங்) மாறியுள்ளது.

"இன்றைய நாட்களில் பாடசாலை மாணவ மாணவிகளை பிக் மேட்ச்கள் மூலம் பீர் குடிக்க வைப்பது அதிகரித்துள்ளது. இறுதியில் அவர்கள் ஏதோ ஒரு வகையில் போதைக்கு அடிமையாகி விட்டனர். அவர்களில் சிலர் ஐஸ் பாவனையை நோக்கி தள்ளப்பட்டுள்ளனர். எந்தவொரு போதைப்பொருளின் ஒரு முறை உபயோகித்தாலும் சிறுவர்கள் நிரந்தரமாக அடிமையாகி விடுகிறார்கள்."

"போதைப்பொருள் வியாபாரிகளுக்கு எதிராக கிராமங்களில் இருந்து அனைத்து பிரசாரங்களும் போராட்டங்களும் தொடங்கப்பட வேண்டும். இந்த போதைப்பொருள் அச்சுறுத்தல் மேலும் பரவினால், நாட்டின் பொறுப்புகளை ஏற்க அடுத்த தலைமுறையே இருக்காது.

பாடசாலைகள் மற்றும் பாடசாலைகளுக்கு வெளியே சோதனை தொடங்க வேண்டும். பாடசாலைகளுக்குள் போதைப்பொருள் நுழைவதற்கான சாத்தியமான அனைத்து வழிகளும் தடுக்கப்பட வேண்டு.

மதுபானம் மற்றும் சிகரெட் போன்ற போதைப்பொருள் விநியோகத்தில் ஈடுபடும் நபர்கள் அதிகபட்ச தண்டனையை எதிர்கொள்ள வேண்டும்.

போதைப்பொருள் விற்பனை செய்பவர்களுக்கும் அவற்றை வாங்குபவர்களுக்கும் அதிகபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும்" என மருத்துவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஒருவர் அடித்துக் கொலை... 02ஆம் பக்க தொடர்...

தொடர்புடைய சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவரை கைதுசெய்வதற்காக மாளிகாவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## 06 தனியார் வைத்தியசாலை... 02ஆம் பக்க தொடர்...

பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, சிறுநீரக வர்த்தகத்துடன் சம்பந்தமுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரை 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக மஜிஸ்திரேட் நீதவான் ரஜீந்திரா ஜயசூரிய உத்தரவிட்டுள்ளார்.

## காணி வங்கி...(தொடர்)

பிரசன்ன ரணதுங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான இந்தளவு காணிகள் நாடு முழுவதும் நகர்ப்புறங்களில் காணப்படுவதுடன் அவை அதிக வர்த்தக பெறுமதியைக் கொண்டவையென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அவற்றில் பெரும்பாலான காணிகள் இதுவரை உச்சளவு உபயோகப்படுத்தப்படவில்லையென்பதை சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், பெரும் வர்த்தக பெறுமதி கொண்ட மேற்படி காணிகளை நாட்டின் தேசிய திட்டங்களுக்கு அமைவாக அரச மற்றும் தனியார்துறை இணைந்த திட்டமாக அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அவற்றை உச்ச அளவில் உபயோகித்து நாட்டின் பொருளாதாரத்துக்கு அதன் மூலம் பங்களிப்புச் செய்ய முடியும் என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## டொலர் நெருக்கடிக்கு... (தொடர்)

சிக்கல் ஏற்பட்டுவிடும். எனவே எப்படியாவது நாட்டுக்கு டொலரைத் தேடுவது அவசியமென அமைச்சரவையின் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே (6) அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் வெளிநாட்டு கையிருப்பை கட்டியெழுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படாவிட்டால், தற்போதுள்ள டொலர் நெருக்கடியை ஏதேனுமொரு சொத்தை விற்று தீர்க்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இல்லை என்றால் சர்வதேச நாடுகளுடன் கொடுக்கல் வாங்கலை செய்யும் திறனை இலங்கை இழந்துவிடும். அத்துடன், அரசாங்கத்தின் அன்றாட செலவுகளை பராமரிப்பதிலும் சிக்கல் ஏற்படுமெனவும் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வெளிநாட்டு கையிருப்பை 03 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் கொண்டு செல்வதற்கு இலங்கை கடுமையாக உழைக்க வேண்டுமென்றும் தெரிவித்த அவர், நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்து வரவு செலவுத் திட்ட நெருக்கடியைத் தணிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இறுதியாக, இவ்வாறான சொத்துக்களை விற்பனை செய்வதில் நாம் மிகவும் கவனமாகவும் பொறுப்புடனும் செயற்பட வேண்டும்.

முடிந்தவரை வெளிநாட்டு முதலீடுகளை நாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்க வேண்டுமெனவும் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

## கடந்த பத்து மாதங்களில்... (தொடர்)

வருடாந்தம் வேலை வாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் செல்பவர்களின் எண்ணிக்கையில் இது பாரிய அதிகரிப்பென்று மத்திய வங்கி கூறுகிறது.

இதேவேளை, 2022 ஒக்டோபர் மாதத்தில் 28,473 பேர் வேலை வாய்ப்புக்காக வெளிநாடு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் 11,399 திறனற்ற தொழிலாளர்கள், 7,887 பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் மற்றும் 6,165 பேர் உள்நாட்டு சேவைகளுக்காக சென்றுள்ளனர். 2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் பதிவாகியுள்ள வெளிநாட்டுப் பணம் 355 மில்லியன் டொலர்களென இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2022 ஜனவரிஅக்டோபர் இல் பெறப்பட்ட வெளிநாட்டுப் பணம் 2,929 மில்லியன் டொலர்கள். 2021 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில், இந்த மதிப்பு 4,895 மில்லியன் டொலர்களாக பதிவாகியுள்ளது.

## வரவு செலவுத்... (தொடர்)

மதிப்பீடு மீதான விவாதம் 15 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரையிலான 07 நாட்கள் நடைபெற்றன.

அதனையடுத்து 22 ஆம் திகதி மாலை 6.00மணிக்கு இரண்டாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு நடைபெற்றது.

அந்த வாக்கெடுப்பில் வரவு செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக 121 வாக்குகளும் எதிராக 84 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அந்த வாக்கெடுப்பில். ஆளும் கட்சியுடன் இணைந்து எதிர்க்கட்சியில் உள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எம்.பி.க்களான ஜீவன் தொண்டமான், ராமேஸ்வரன் ஆகியோரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை சேர்ந்த துமிந்த திசாநாயக்க, பிரியங்கர ஜயரத்ன ஆகியோரும் வாக்களித்தனர்.

வரவு செலவுத்திட்டத்திற்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் எதிர்கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி , ஜே வி.பி.,கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி டளஸ் அழகப்பெரும , விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார தலைமையிலான அணியினரும் வாக்களித்தனர். அதேபோன்று எதிரணியிலுள்ள அதாவுல்லா எம்.பி. அலி சப்ரி ரஹீம் எம்.பி. ஆகியோரும் ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சபைக்கு சமகமளிக்கவில்லை. அதேவேளை தமிழ் தேசிய மக்கள் கூட்டணியின் தலைவரான சி.வி.விக்னேஸ்வரன் சபையில் சமுகமளித்திருந்த போதும் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

அந்த வகையில் வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 121 உறுப்பினர்களும் எதிராக 84 உறுப்பினர்களும் வாக்களித்தபோதும் 18 உறுப்பினர்கள் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## டிக்கட் இன்றி பயணம்... (தொடர்)

பரிசோதனையின் போது செல்லுபடியான பயணச்சீட்டின்றி ரயிலில் பயணித்த 124 பேர் கைது செய்யப்பட்டனர்.

நடமாடும் பயணச்சீட்டு பரிசோதகர்கள் மற்றும் கோட்டை புகையிரத நிலைய ஊழியர்கள் இணைந்து இந்த விசேட பரிசோதனையை மேற்கொண்டதாக புகையிரத வர்த்தக பிரதி பொது முகாமையாளர் வி.எஸ்.பொல்வத்தகே தெரிவித்தார். அங்கு கைது செய்யப்பட்ட 78 பேர் அபராதத் தொகையை ஒரே நேரத்தில் செலுத்தியுள்ளனர். அவர்களிடமிருந்து பெற்ற அபராதத் தொகை இரண்டு இலட்சத்து 38,770 ரூபாவாகும். ஏனைய 46 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய அபராதத் தொகை ஒரு இலட்சத்து 39,840 ரூபா எனவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, டிக்கட்டின்றி கைது செய்யப்பட்ட 124 பேரிடமிருந்து அறவிடப்பட்ட மொத்த அபராதத் தொகை 03 இலட்சத்து 78,610 ரூபாவாகும்.

## பயணிகளுக்கான....(தொடர்)

வெளிநாட்டிலிருந்து இலங்கை வருபவர்கள் பூரணமாக கொவிட்19 தடுப்பூசி செலுத்தியமைக்கான சான்றிதழை சமர்ப்பித்தல் உள்ளிட்ட விதிமுறைகள் தளர்த்தப்படுவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

நேற்று (07) முதல் அமுலாகும் வகையில் இந்த விதிமுறைகள் தளர்த்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

எந்தவொரு விமான நிலையம் அல்லது துறைமுகம் வழியாக நாட்டுக்குள் நுழையும் எந்தவொரு நபரும் பீசிஆர் மற்றும் ரெபிட் அன்டிஜன் உள்ளிட்ட பரிசோதனைகளையோ அல்லது கொவிட் 19 தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்தும் முன்தாக பெறப்பட்ட சான்றிதழையோ சமர்பிக்க வேண்டிய அவசியம் இல்லையென்றும் அவர் கூறினார். வெளிநாட்டுப் பிரஜைகள் அல்லது சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் தரையிறங்கிய பின்னர் கொவிட்19 தொற்று உறுதியானால் அவர்கள் ஏழு நாட்களுக்கு ஒரு தனியார் மருத்துவமனை, விடுதி அல்லது அவர்கள் வசிக்கும் இடத்தில் தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 டிசம்பர் 8
வியாழக்கிழமை

# யாழில். கரப்பான் பூச்சி வடை விற்ற உணவகத்துக்கு சீல்

*யாழ்.விசேட நிருபர்*

யாழ்ப்பாணத்தில் கரப்பான் பூச்சி வடையை விற்பனை செய்த உணவகத்திற்கு நீதிமன்ற உத்தரவின் பேரில் சீல் வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நகர் பகுதியை அண்மித்த பகுதியில் அமைந்துள்ள பிரபல சைவ உணவகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஒருவர் வாங்கிய வடையில் கரப்பான் பூச்சி இருந்ததை கண்ட நபர், இதுதொடர்பில் யாழ்.நகர பொதுசுகாதார பரிசோதகரிடம் முறைப்பாடு செய்தார்.

குறித்த உணவகத்திற்கு சென்ற பொது சுகாதார பரிசோதகர்கள் கடையை பரிசோதனை செய்து நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்தனர்.

அதனைதொடர்ந்து திங்கட்கிழமை குறித்த உணவகத்திற்கு மாநகர



சுகாதார வைத்திய அதிகாரியுடன் பொது சுகாதார பரிசோதகர்கள் சென்று பரிசோதனை மேற்கொண்டிருந்தனர். இதன்போது உணவகம் மற்றும் அதன் சமையலறையில் பல சுகாதார குறைபாடுகள் இனங்காணப்பட்டன. அதனையடுத்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்.மேலதிக நீதவான் நீதிமன்றில் யாழ்.நகர பொது சுகாதார பரிசோதகரினால் உணவக உரிமையாளர், சமையலறை உரிமையாளர் ஆகியோருக்கு எதிராக தனித்தனியாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதனையடுத்து இரு வழக்குகளையும் விசாரித்த நீதவான் உணவகம், அதன் சமையலறை ஆகியவற்றுக்கு மறு அறிவித்தல் வரை சீல் வைத்து மூடுமாறு உத்தரவிட்டதுடன், இரு சந்தேக நபர்களையும் தலா ஒரு இலட்சம் சரீர பிணையில் செல்ல அனுமதித்து மேலதிக நீதவான் வழக்கினை எதிர்வரும் ஜனவரி மாதம் 25ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# யாழ்ப்பாண கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட இருவர் கைது

*யாழ்.விசேட நிருபர்*

யாழ்ப்பாண கடற்பரப்பில் சட்டவிரோதமாக மீன் மற்றும் கடலட்டை பிடித்தமை ஆகிய குற்றச்சாட்டில் இரு மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருநகர் மற்றும் வெற்றிலைக்கேணி பகுதிகளைச் சேர்ந்த இரு மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களையும், அவர்களிடமிருந்து மீட்கப்பட்ட தங்கூசி வலைகள் மற்றும் கடலட்டைகள் போன்றவற்றை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கடற்றொழில் நீரியல் வளத்துறையினரிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

# செம்மணியில் சிவலிங்கம் பிரதிஷ்டை



*பருத்தித்துறை விசேட நிருபர்*

சிவபூமி அறக்கட்டளையினால், செம்மணி பகுதியில் “யாழ்ப்பாணம் வரவேற்கிறது” வளைவுக்கு அருகில் ஏழு அடி உயரமான சிவபெருமான் சிலை நேற்றைய தினம் புதன்கிழமை காலை 8 மணியளவில் பிரதிஷ்டை செய்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மதப்பெரியவர்கள், ஆர்வலர்கள் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண நகருக்குள் நுழைவோர் சிவபெருமானை வணங்கி புனிதமாக நுழைய வேண்டும். அதேபோல் இவ்வீதியில் பயணிப்போர் பாதுகாப்பாக இறை பக்தியோடு பயணிக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலும் இச்சிலை உருவாக்கப்பட்டதாக சிவ பூமி அறக்கட்டளையினர் தெரிவித்தனர்.

# மாந்தை வடக்கில் பிரதேச கலாசார விழா

*தலைமன்னார் விஷேட நிருபர்*

மாந்தை வடக்கில் பிரதேச செயலாளரும் கலாசார பேரவை தலைவருமான கனியூட் அரவிந்தராஜ் டெனிசியஸ் தலைமையில் பிரதேச கலாசார விழா பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவலக திணைக்களத்தின் அனுசரனையுடன் மாந்தை மேற்கு பிரதேச செயலகமும் கலாசார பேரவையும் இணைந்து இவ்விழாவை நடாத்தியது.

இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக




மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் அ.ஸ்ரான்லி டிமெல் கலந்துகொண்டதுடன் சிறப்பு விருந்தினராக மடு வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் இவ்வோன் எல்.எல், கௌரவ விருந்தினர்களாக கலாபூஷணம் சபாரெட்ணம் சிவதாசன், கலாபூஷணம் சந்தியாப்பிள்ளை அருளானந்தம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஐவர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# மதுரையில் இலங்கைத்தமிழ் இலக்கிய விழா

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் தமிழ்நாடு அரசின் மதுரை உலகத் தமிழ்ச்சங்கமும் இணைந்து நடாத்தும் 'தமிழ் வளர்ச்சியில் இலங்கைத் தமிழரின் பங்களிப்பு' என்ற தொனிப்பொருளில் அமைந்த பன்னாட்டுக் கருத்தரங்கு எதிர்வரும் 22 ஆம் 23 ஆம் திகதிகளில் மதுரை உலகத்தமிழ்ச்சங்கப் பெருந்திட்ட வளாகத்தில் நடைபெறவுள்ளது.

மதுரை உலகத் தமிழ்ச்சங்க இயக்குநர் முனைவர் ப.அன்புச்செழியன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சியில் இலங்கைத் தமிழரின் பங்களிப்புத் தொடர்பில் கருத்தரங்கு மற்றும் கவியரங்கம், பட்டிமன்றம் போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. கருத்தரங்கு அமைப்பாளர்களாக யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கப் பெருந்தலைவர் வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், துணைத்தலைவர் செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் ஆகியோர் செயற்படவுள்ளனர்.









யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் திருக்கார்த்திகை உற்சவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. கார்த்திகை மாத, கார்த்திகை நட்சத்திரத்துடன் கூடிய குமராலய தீபத்திருநாளான செவ்வாய்க்கிழமை வசந்தமண்டப பூஜை நடைபெற்று வள்ளி, தேவசேனா சமேதராக கைலாச வாகனத்தில் முத்துக்குமார சுவாமி எழுந்தருளி, ஆலய முன்றலில் அமைக்கப்பட்டிருந்த சொக்கப்பனை கொளுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து நல்லூர் முருக பெருமான் வெளிவீதியுலா வந்தார். படங்கள்: யாழ்.விசேட நிருபர்

# ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது

*கிளிநொச்சி குறூப் நிருபர்*

கிளிநொச்சி பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஐஸ்போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இப்பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் வீதி சோதனை நடவடிக்கையின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் ஐஸ் போதைப்பொருளை மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைத்திருந்தமை தெரியவந்துள்ளது.

இவரிடமிருந்து 900 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் பதினையாயிரம் ரூபாய் பணமும் மீட்கப்பட்டுள்ளது. மேலும் அவர் பயணித்த மோட்டார் சைக்கிள் மற்றும் கைத்தொலைபேசி, இறுவட்டு என்பன மீட்கப்பட்டுள்ளன.

இறுவட்டில் ஐஸ் போதைப்பொருளை பயன்படுத்தும் போது எடுக்கப்பட்ட படங்கள் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி. எம். சதுரங்க தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட

# வைத்தியசாலையில் 80ற்கு மேற்பட்ட மருந்துப்பொருட்களுக்கு தட்டுப்பாடு





*கிளிநொச்சி குறூப்,பரந்தன் குறூப் நிருபர்கள்*

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பெருமளவு அத்தியாவசியமான மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் மிகவும் அத்தியாவசியமான மருந்துப் பொருட்கள் உட்பட 80ற்கு மேற்பட்ட மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு காணப்படுவதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில வாரங்களாக இந்நிலைமை காணப்படுவதாகவும், சிகிச்சைக்காக வருகை தரும் பொதுமக்கள் பெருமளவுக்கு மருந்துப்பொருட்களை வெளியில் வாங்குவதற்கே வைத்தியர்கள் பற்றுச்சீட்டு எழுதிக்கொடுப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையை பொறுத்தவரை வறுமைக்கோட்டின் கீழ் உள்ள அதிகளவு நோயாளர்கள் சிகிச்சைக்காக வருகை தருகின்ற போது அவர்களுக்கான மருந்துகளை வெளியில் கொள்வனவு செய்யுமாறு வைத்தியர்களால் சிபாரிசு செய்யப்படுகின்றது. இந்நிலைமையால் பலர் தங்களுக்குரிய மருந்துகளை கொள்வனவு செய்யாது அலட்சியமாக இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தினகரன்
THINAKARAN திනකරන්

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 22ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஊலா பிறை 13

## குறள் தரும் சிந்தனை



இனையர் இவரெமக்கு இன்னம்யாம் என்று
புனையினும் புல்லென்னும் நட்பு

நண்பர்கள் ஒருவருக்கொருவர் இவர் எமக்கு இத்தன்மையுடைவர்; யாம் இவருக்கு இத்தன்மையுடையோம் என்று செயற்கையாகப் புகழ்ந்து பேசினாலும் அந்த நட்பின் பெருமை குன்றிவிடும்.

# வறியோரை இலக்கு வைக்கும் சிறுநீரக வியாபாரக் கும்பல்கள்!

பொருளாதாரக் கஷ்டங்களுக்கு உள்ளாகியுள்ள ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களை இலக்கு வைத்து முன்னெடுக்கப்பட்டுள்ள சட்டவிரோத சிறுநீரக வியாபாரம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இம்மோசடி வியாபாரம் கொழும்பு, பொரளையிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் வந்துள்ளன.

கடந்த ஓகஸ்ட் 3 ஆம் திகதி முதல் நவம்பர் 3 ஆம் திகதி வரையும் 30 முதல் 42 வயதுக்குட்பட்ட ஆறு பேர் அதிக விலை வழங்கப்படும் என்று கூறப்பட்டதற்கு அமைய தம் சிறுநீரகங்களை வழங்கியுள்ளனர். அவர்களில் ஒன்றரை வயது மற்றும் ஐந்து மாத குழந்தைகள் இரண்டின் தாயொருவரும் அடங்கியுள்ளார்.

பொருளாதார ரீதியில் நிதிக்கஷ்டங்களுக்கு முகம் கொடுத்துள்ளவர்களை இலக்கு வைத்து அவர்களது உடல் அவயவங்களை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் விற்பனை செய்யும் இம்மோசடி குறித்து பொரளை பொலிஸாருக்கு முதலில் முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளது. இது தொடர்பில் விசாரணை செய்யும் பொறுப்பை மேல்மாகாண பிரதிப் பொலிஸ் மாஅதிபர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்.

அதற்கேற்ப, கடந்த நவம்பர் மாதம் 29 ஆம் திகதி இது குறித்து நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஒரு சிறுநீரகத்திற்கு 50 இலட்சம் முதல் 120 இலட்சம் வரை வழங்குவதாகக் கூறியே இம்மோசடியினால் பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து சிறுநீரகங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அதன் பின்னர் அவர்களுக்கு வழங்குவதாகக் கூறப்பட்ட நிதித்தொகையோ, உரிய சிகிச்சைகளோ அவர்களுக்கு அளிக்கப்படவில்லை. இது ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை இச்சிறுநீரக மோசடி வியாபாரத்தின் பிரதான முகவராகச் செயற்பட்டவராகக் கருதப்படும் மட்டக்குளி, கஜிமா வத்தையைச் சேர்ந்த 41 வயது மதிக்கத்தக்க சந்தேகநபரைக் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்து நீதி மன்றத்தில் நேற்றுமுன்தினம் ஆஜர் செய்துள்ளனர்.

இம்மோசடி தொடர்பிலான மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ், இம்மோசடி வியாபாரம் தொடர்பிலான விடயங்களை நீதிமன்றில் எடுத்துக் கூறியுள்ளார். அவை தொடர்பில் கவனம் செலுத்திய கொழும்பு மேலதிக மஜிஸ்ரேட் ரஜிந்திரா ஜயசூரிய, குறித்த வைத்தியசாலையின் பணிப்பாளர்சபை அங்கத்தவர்களான ஐந்து மருத்துவர்கள் உள்ளிட்ட ஆறு பேருக்கு வெளிநாட்டு பயணங்களுக்கு தடை விதித்து கட்டளை பிறப்பித்துள்ளார்.

அதேநேரம் சிறுநீரக மோசடி வியாபாரத்தின் முக்கிய முகவராகக் கருதப்படும் குறித்த சந்தேகநபரை அடையாள அணிவகுப்புக்காக எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் கொழும்பு மேலதிக மஜிஸ்ரேட் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அத்தோடு இம்மோசடியினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை அச்சுறுத்தினார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள பிரதம பொலிஸ் பரிசோதகர் குறித்து விசாரணை செய்து மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவுக்கும் கொழும்பு மேலதிக மஜிஸ்ரேட் பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும் இம்மோசடி வியாபாரத்துடன் சம்பந்தப்பட்ட ஆறு பேர் தலைமறைவாகியுள்ளதாகவும், அவர்களைத் தேடிக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ குறிப்பிட்டிருக்கின்றார்.

இவை இவ்வாறிருக்க, இம்மோசடி குறித்து விசாரணை செய்யவென சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் அசேல குணவர்தன தலைமையில் ஐந்து விஷேட மருத்துவர்கள், ஒரு சட்ட வைத்திய அதிகாரி, ஒரு விசாரணை அதிகாரி என ஏழு பேர் கொண்ட குழுவொன்றும் அமைக்கப்பட்டுளளது.

இவ்வாறு இச்சிறுநீரக மோசடி வியாபாரம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடியதாக அமைந்துள்ளன. இந்நடவடிக்கைகள் நிச்சயம் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நியாயத்தையும் நிவாரணத்தையும் பெற்றுக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

வறுமையையும் பொருளாதார சிரமங்களையும் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஏழைகளின் உடல் அவயவங்களை விலை பேசுவதும், அதிக விலை வழங்கப்படும் என ஆசை வார்த்தை காட்டுவதும், அதனைப் பயன்படுத்தி உடல் அவயவத்தைப் பெற்றுக் கொண்டு வழங்குவதாகக் கூறிய பணத்தை வழங்க மறுப்பதும் எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாத குற்றங்களாகும்.

இவ்விதமான மோசடிகளைத் தவிர்த்துக் கொள்வதில் மக்கள் விழிப்புடன் செயற்படுவது அவசியம். அதேநேரம் இம்மோசடியினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நீதியும் நிவாரணமும் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும். அத்தோடு இவ்வாறான மோசடிகள் இனிமேல் இடம்பெறாத வகையில் சட்ட ரீதியில் உரிய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# யாழ் பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட 'ஒருங்கிணைக்கப்பட்ட ஊடகச் செய்தியறை'

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்திற்கும் சுவிற்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஹெல்வெற்றாஸ் நிறுவனத்துக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட 'ஒருங்கிணைக்கப்பட்ட ஊடகச் செய்தியறை' (Integrated Newsroom) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கடந்த 6 ஆம் திகதி செவ்வாயன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.





மேற்படி செய்தியறையானது ஊடகக் கற்கைகள்துறை மாணவர்கள் அச்சு ஊடகங்கள், தொலைக் காட்சி, வானொலி மற்றும் இணைய ஊடகங்களில் ஒருசேரப் பயிற்சி பெறுவதற்கான வசதிகளையும் உபகரணங்களையும் கொண்டதாக அமைக்கப்படுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்செய்தியறையானது, ஹெல்வெற்றாஸ் நிறுவனம் இலங்கையின் ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் ஆகிய மூன்று பல்கலைக்கழகங்களில் முன்னெடுக்கும் சிந்தனை அரும்புகளங்களை (Incubator Spaces) உருவாக்கும் திட்டத்தின் ஒரு அங்கமாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

யாழ்நகரின் ஜூம்மா மசூதி வீதியில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் ஊடகக் கலையகம் அமைந்திருக்கும் வளாகத்தில் நிறுவப்பட்டிருக்கும் இந்த ஒருங்கிணைக்கப்பட்ட ஊடகச் செய்தியறையை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு திறந்து வைத்தார்.



இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக ஹெல்வெற்றாஸ் சிந்தனை அரும்புகளத்தின் கருத்திட்ட முகாமையாளர் சந்துலா கும்புகஹே, ஊடகக் கற்கைகள் துறையின் தலைவர் பேராசிரியர் எஸ். ரகுராம், இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்ற நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் மொகமட் அசாத், ஹெல்வெற்றாஸ் மற்றும் இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்ற அதிகாரிகள், ஊடகக் கற்கைகள் துறை விரிவுரையாளர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தப் பல்செயற்பாட்டுக் களமானது பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் மாணவர்கள், துறைசார் நிபுணர்கள், ஊடகத் தொழில்வாண்மையாளர்கள், வளவாளர்கள் ஆகியோருக்கிடையே இணைந்து செயற்படல் மற்றும் கூட்டுழைப்பு என்பவற்றுக்கான இயலுமையை வழங்கக் கூடியதாக அமையும் என்று இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் ஹெல்வெற்றாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

வெளிப்பாட்டுச் சுதந்திரம், தகவல் உரிமைகளை ஊக்குவிப்பதற்கான இக்கருத்திட்டமானது ஐரோப்பிய ஒன்றியத்தினால் நிதியீட்டம் செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

# பேராசிரியர் ஜவாஹிருல்லா எழுதிய 'நபிகளாரின் சமூக உறவு' நூல்

தமிழ்நாடு சட்டசபை உறுப்பினரும், எழுத்தாளருமான பேராசிரியர் எம்.எஸ்.ஜவாஹிருல்லா எழுதியுள்ள 'நபிகளாரின் சமூக உறவு' எனும் நூல் வாசிக்கக் கிடைத்தது. முஹம்மது நபிகளாரின் சமூக உறவு பற்றி ஆராயும் ஒரு முன்னோடி நூலாக இதனைக் குறிப்பிடலாம்.

12 அத்தியாயங்களுடன் 112 பக்கங்களில் கவர்ச்சிகரமான அட்டைப் படத்துடன் இந்த நூல் வெளிவந்துள்ளது. தற்காலத்தில் கலங்கரை விளக்கம் இதுவென முதுவை மு.பே.சக்திவேல் முருகன் இந்த நூலை அறிமுகப்படுத்தியுள்ளார்.

இந்நூல் பற்றி கருத்துத் தெரிவித்துள்ள சென்னை புஹாரி ஆலயம் அரபுக்கல்லூரி அதிபர் முனைவர் மௌலவி சையிட் ஜமாலி, மனித நேயம், சகோதரத்துவம், பிற சமூகத்துடன் இணக்கமாக வாழ்வது பற்றி இந்நூல் சிறப்பாக பதிவு செய்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

காலத்தின் தேவைக்கேற்ற ஆக்கம் என தமிழ்நாடு ஜம்இய்யத்துல் உலமா செயலாளர் மௌலவி முனைவர் பி.எஸ். அன்வர் பாதுஷா அலவி குறிப்பிட்டுள்ளார்.



முஸ்லிம் எனும் ஐக்கிய சமூகம் பன்மைச் சமூகத்தில் எத்தகைய உறவு வைத்திருக்க வேண்டுமென்பதை இந்நூல் எடுத்துக் காட்டுவதாக இலங்கை பேராசிரியர் எம்.எஸ். எம்.அனஸ் தெரிவித்துள்ளார்.

பேராசியர் ஜவாஹிருல்லா, சென்னை பல்கலைக்கழகத்தில் மேலாண்மை அறிவியலில் எம்.பி.ஏ. பட்டமும், வட்டியில்லா வங்கிகளின் செயல் திறன் பற்றிய ஆய்வில் முனைவர் பட்டமும் பெற்றவர் ஆவார். வாணியம்பாடி இஸ்லாமிய கல்லூரியில் 25 ஆண்டுகள் பேராசிரியராகப் பணியாற்றி, ஓய்வு பெற்று இப்போது மக்கள்நல பணியைச் செய்து வருகிறார். தமிழிலும், ஆங்கிலத்திலும் பல நூல்களை வெளியிட்டுள்ள இவர், 2003 ஆம் ஆண்டில் ஐ.நா மனித உரிமை ஆணையகத்தில் இந்திய சிறுபான்மையினர் சார்பாக உரையாற்றியிருக்கிறார்.

இஸ்லாத்தின் சிறப்புக்கள் சரியான முறையில் ஒரு பக்கத்தில் எடுத்துரைக்கப்பட்டு வந்தாலும், மறுபுறத்தில் இஸ்லாத்தின் கொள்கைகள் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டும் பல நேரங்களில் பல்வேறு விமர்சனங்களுக்கும் உள்ளாகின்றன. தங்களை இஸ்லாத்தின் அடிப்படையில் நடந்து கொள்பவர்கள் போல் காட்டிக் கொள்ளும் சில குழுக்களின் நடவடிக்கைகள் மக்களிடையே இஸ்லாம் பற்றிய தவறான தகவல்களை பரப்பப்படுவதற்கும் காரணிகளாக அமைகின்றன என நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.




தமிழில் ஒரு முன்னோடியாக அமையும் இந்நூலில் பேராசிரியர் ஜவாஹிருல்லா உலகின் கோடிக்கணக்கான மக்கள் பின்பற்றும் சமூக உறவைப் பற்றி அறிமுகப்படுத்தியுள்ளார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சபைகளின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான (லோக் சபா) பேராசிரியர் காதர் முஹைதீன் இந்த நூலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

நபிகளார் வாழ்ந்த காலத்தில் அவர் காட்டிய வழியும், ஊட்டிய நெறியும் மானிட சமூகத்தை ஒன்றிணைக்கும் முயற்சியாகவே இருந்தது. அந்த வழி இன்றைக்கும் முயற்சியாகவே இருந்துவருகிறது. இந்தியாவில் மட்டுமன்றி, முஸ்லிம்கள் எங்கு சிறுபான்மையினராக வாழ்கிறார்களோ, அவர்கள் எல்லோருமே நபிகளார் காட்டிய இந்த சமூக உறவு முறையைப் புரிந்து அதன்படி வாழ்ந்தால், என்றும் நலம் பெறுவர் என்பதை இந்த நூல் சுட்டிக் காட்டியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியரின் இந்த நல்ல முயற்சி தமிழில் மட்டுமன்றி, ஆங்கிலம் மற்றும் சிங்கள, ஹிந்தி ஆகிய மொழிகளில் வெளிவருவதன் மூலம் நபிகளாரைப் பற்றி தவறாக புரிந்துகொண்டுள்ளவர்களுக்கு பயனுள்ளதாக தமது ஷரத்துக்களை மாற்றிக் கொள்ள பயனுள்ள ஒரு நூலாக அமையும்.

என்.எம்.அமீன்...

# நவீன ஓவியக்கலையின் பிதாமகன் மாற்கு உருவாக்கிய பாதையில் வளர்ந்த மாபெரும் கலைஞன் கே.கே. ராஜா

சமகால ஈழத்து ஓவியர்களில் நீண்ட காலம் பயணித்து வந்திருப்பவர் கே.கே.ராஜா என அறியப்படும் கனகசபை கிருஷ்ணராஜா ஆவார். வடபுலத்தின் நவீன ஓவியக்கலையின் முன்னோடியும் பிதாமகனுமான அ.மாற்கு அவர்களால் பருத்தித்துறையில் மிகச்சிறிய வயதிலிருந்தே ஓவியத்திற்கு கிருஷ்ணராஜா அறிமுகப்படுத்தப்பட்டார்.

ஹாட்லி கல்லூரியிலிருந்து கொழும்பு வித்தியாலங்கார பல்கலைக்கழகத்தில் 1973_1978 ஆம் ஆண்டுப்பகுதியில் ஓவியம், சிற்பம் ஆகிய நுண்கலைகளில் சிறப்புப்பட்டம் பெற்றவர்.

யாழ்ப்பாணத்தின் ஓவிய மரபில் நவீனத்தைக் கொணர்ந்த மாற்கு அவர்கள் ராஜாவின் ஆதர்ச குருவாவார். எளிமையான ஓவியர் மாற்குவின் பார்வையில் கையில் கிடைக்கும் எந்தப்பொருளுமே ஓவியத்தின் சிற்பத்தின் மூலப்பொருளாகியது. கடற்கரையில், தோட்டத்தில், மரப்பட்டையில், கழிவுப்பொருட்களில் எல்லாம் கலைவண்ணம் கண்ட அந்த ஓவியப்பெருமகனின் நினைவாக, இலங்கை மாணவர்கள் மத்தியில் 'ராஜா விம்பம்' அமைப்பின் மூலமாக நடத்திய ஓவியப்போட்டிகளும், ஓவியக்கண்காட்சியும் தமிழ் மாணவர்கள் மத்தியில் பெரும் புத்துணர்ச்சியை ஏற்படுத்தியதெனலாம்.



2019ஆம் ஆண்டில் பருத்தித்துறை, ஆனைக்கோட்டை, தெல்லிப்பளை, கிளிநொச்சி,மட்டக்களப்பு, கொட்டகலை ஆகிய இடங்களில் இவர் நடத்திய சிறுவர் ஓவியப்போட்டிகளும், ஊக்குவிப்புத் தொகையாக ரூபாய் 5000,000 பரிசளித்தமையும் மாணவர் மத்தியில் புது உற்சாகத்தை ஏற்படுத்தியதெனலாம்.

ராஜாவிடம் ஓவியக்கலையுணர்வும் ரசனையும் செறிந்திருக்கிறது. தன் நீண்ட ஓவியப்பயணத்தில் அவர் தனக்கே உரித்தான ஓர் ஓவியப்பாணியைச் செதுக்கியிருக்கிறார். வண்ணங்களும் தூரிகைகளும் கொண்டு ஓவியர் மாற்குவின் கோடுகளிலும் கோலங்களிலும் மூழ்கியிருந்த ராஜா இன்று ஓவியத்தின் முப்பரிமாண வடிவைச்சாதிக்க முனைகிறார்.கடதாசிகளை மூலப்பொருளாக்கி, அதனை ஒளிப்பதிவாக்கி, அதன்மீது ஓவியத்தைப் பரீட்சிக்கும் எல்லைக்கு வந்திருக்கிறார்.

அமெரிக்காவில் வாழும் எழுத்தாளர் சிறீதரனின் சிறுகதைகளுக்காக அவர் தீட்டிய ஓவியங்கள் புற உருவங்களை ஒதுக்கி, அக உணர்வுகளை வெம்மையை, சீற்றத்தை, சோகத்தை, அந்தரத்தை வண்ணச்சிதறலாக வெளிப்படுத்துவதைக் காணலாம்.

கணினிக்கூடாக ஓவியத்தின் புதிய சாத்தியப்பாடுகளை ராஜா வெற்றிகரமாகப் பரீட்சித்துப் பார்த்திருக்கிறார். நீர்வண்ணத்தையும் அக்றிலிக் வண்ணத்தையும் தைல வண்ணத்தையும் ஒன்றிணைத்துப் பரீட்சிப்பது இன்றைய கணினி யுகத்தில் சாத்தியமாகிறது. தூரிகை போல, வண்ணங்களைப் போல, கரித்துண்டுகளைப் போல, காகிதத்தைப்போல, மரச்சட்டங்களைப்போல கணினியையும் ஓர் ஊடகமாக்கி ஓவியத்தில் கோலம் காட்டும் உன்னத கலைஞனாக ராஜா திகழ்கிறார்.

கொழும்பு, யாழ்ப்பாணம், பாரிஸ், லண்டன் ஆகிய இடங்களில் ராஜாவின் ஓவியக்கண்காட்சிகள் பல்வேறு அமைப்புகளால் நிகழ்த்தப்பட்டிருக்கின்றன.

ஓவியர் ராஜாவின் மற்றுமொரு கலாபூர்வமான வெளிப்பாடாக அவரது நடிப்புத் திறனைக் குறிப்பிட்டாக வேண்டும்.' முகமில்லாத மனிதர்கள்' வரும் இந்திரஜித் ஆகட்டும், 'யுகதர்மம்' நாடகத்தில் பாடல் இசைத்து மேடையை ஆக்ரமிக்கும் முதலாளியாகட்டும், 'மழை' நாடகத்தில் வரும் மருத்துவராகட்டும், 'பிரத்தியேகக்காட்சி'யில் வரும் அப்பாவி எழுத்தாளராகட்டும், தான் தோன்றிய நாடகப்பாத்திரங்களாகவே மாறி, ரசிகர்கள் நெஞ்சில் தனியிடம் பிடித்திருக்கும் பெரும் நாடகக் கலைஞர் இவர்.

சஞ்சிகைகளின் வடிவமைப்பில் அவர் ஆற்றியிருக்கும் பணி அளப்பரியது. 'நாழிகை'யின் இதழ் அமைப்பை ஒரு சர்வதேச சஞ்சிகையின் தரத்திற்கு வடிவமைத்ததில் ராஜாவின் ஓவியத்திறனும் அவரது கணினி நுட்பமும் முக்கிய பங்கினை வகித்திருக்கிறது என்கின்றார் நாழிகை ஆசிரியர் எஸ்.மகாலிங்கசிவம். லண்டனில் விம்பம் கலை, இலக்கிய அமைப்புக்கூடாக இதுவரை ஒன்பது குறும்படவிழாக்களை நிகழ்த்தி, குறும்படத் தயாரிப்புக்கு உத்வேகம் தரும் பெரும் பணியை ராஜா செய்திருக்கிறார். 350க்கும் அதிகமான குறும்படங்களைத் திரட்டி, அவற்றுள் தரமான 135 குறும்படங்களைக் காட்சிப்படுத்திப் பொது மக்கள் ரசனைக்குக் கொண்டுசென்ற சாதனை அவருடையது.

ஒரு கலைஞன் என்ற வகையில் ஓவியர் கே.கிருஷ்ணராஜா தமிழ்ச் சமூகத்திற்குக் கிடைத்த பெரும் வரப்பிரசாதமாவார். வசீகரமும் எளிமையும் மனித நேயமும் தாராள மனதும் கொண்ட ராஜாவின் ஓவிய உலகம் அவரின் வண்ணக்கனவுகளின் பிரபஞ்சமாகும்.

மு.நித்தியானந்தன்...




# வெலிமடை டவுன்சைட் தோட்ட பிரச்சினை; தீர்வின்றேல் தொழிற்சங்க நடவடிக்கை

## செந்தில் தொண்டமான் எச்சரிக்கை

வெலிமடை டவுன்சைட் தோட்டத்தில் தொழிலாளர்களுக்கு அரை பேர் வழங்கல், தொழிலாளர்களை முறையாக நடத்தாமை உள்ளிட்ட விடயங்களுக்கு தோட்ட நிர்வாகம் எதிர்வரும் திங்கட் கிழமைக்குள் தீர்வு வழங்காவிடின், மல்வத்த பிளான்டேஸனுக்கு சொந்தமான அனைத்து தோட்டங்களிலும் போராட்டம் முன்னெடுக்கப்படும் என இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் தோட்ட நிர்வாகத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.



தொழிலாளர்கள் எதிர்கொண்டுள்ள இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் குறித்த தோட்டத்திற்கு எதிர்வரும் திங்கட்கிழமை நேரடியாக விஜயம் மேற்கொள்ளவுள்ளதுடன்,

தோட்ட நிர்வாகத்துடனான பேச்சுவார்த்தையில் முடிவு எட்டப்படாவிடின் மல்வத்த பிளான்டேஸனுக்கு சொந்தமான அனைத்து தோட்டங்களிலும் பணிபுரியும் தொழிலாளர்கள் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# எம்பிலிப்பிட்டியவில் கஞ்சா செய்கைக்கு இடமளிக்க மாட்டோம்

## ஓமல்பே சோபித தேரர் எச்சரிக்கை


**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

மனித மாமிசம், வேட்டை இறைச்சி, கஞ்சா, மலேரியா நோய் போன்ற பல்வேறு தீயவிடயங்களுக்கெல்லாம் பெயர் பெற்றிருந்த எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தை இப்பிரதேச பிக்குகள் பௌத்த சமூகத்தின் ஒத்துழைப்புடன் மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியில் மீட்டெடுத்தோம். எனவே இப் பிரதேசத்தில் மீண்டும் கஞ்சாவைப் பயிர் செய்து எமது பிரதேசத்தினை நாசமாக்குவதற்கு ஒரு போதும் இடமளிக்க மாட்டோம் என ராமன்ய நிகாயவின் தென்பகுதி சங்கநாயக்கர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் கஞ்சா பயிர் செய்யப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படும் கருத்து குறித்து தகவல் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

எமது பாரம்பரிய பிரதேசத்தில் 10,000 ஏக்கரில் கஞ்சா செய்கை மேற்கொள்ளவுள்ளதாக ஆயுர்வேதத்துறை அமைச்சர் கூறுகிறார். இவ்விடயத்துக்கு இப்பிரதேச பிக்குகளோ பௌத்த மக்களோ ஒரு போதும் இடமளிக்க மாட்டோம்.



1970 களில் பல்வேறு இழிவான செயல்களுக்கும் பெயர்பெற்ற எமது பிரதேசத்தின் இழி பெயரை மாற்றியமைத்த எங்களுக்கு கஞ்சாவை மீண்டும் பிரபல்யப்படுத்த அனுமதிக்க முடியாது.

கஞ்சா மூலம் வருமானத்தை விட சீரழிவுகளையே அதிகம் சந்திக்க நேரிடும். கஞ்சாவை ஏற்றுமதி செய்து வருமானம் ஈட்ட முயற்சிப்போர் அதைவிட வருமானம் தரக்கூடிய மூலிகைகளை ஏன் பயிர்செய்வதில்லை எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

### ஹற்றன் ரயில்நிலையத்திலிருந்து

# சிவனொளிபாதமலைக்கு விசேட பஸ் சேவை

**ஹற்றன் மத்திய விசேட நிருபர்**



இவ்வருட சிவனொளி பாத மலை யாத்திரை காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில், நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ரயிலில் வரும் பக்தர்களின் வசதிக்காக ஹற்றன் புகையிரத நிலையத்தில் இருந்து நல்லதண்ணிய வரை பஸ் சேவைகளை ஈடுபடுத்த ஹற்றன் டிப்போ நடவடிக்கை எடுத்துள்ளது. கொழும்பில் இருந்து பதுளை மற்றும் பதுளையில் இருந்து கொழும்பு வரை செல்லும் ரயில்கள் ஹற்றன் புகையிரத நிலையத்தை வந்தடையும் போது, அந்த நிலையத்தில் இருந்து நல்லதண்ணிக்கும், நல்லதண்ணி யிலிருந்து ஹற்றன் புகையி ரத நிலையத்திற்கும் இந்த வருட இறுதி வரை இந்த விசேட பஸ் சேவைகள் இடம்பெறும் என ஹற்றன் டிப்போ கண்காணிப்பாளர் டபிள்யூ. ஜி. ஜே. கே. கீர்த்திரத்ன தெரிவித்தார்.

# ஹொரணை பெருந்தோட்ட நிறுவனத்துக்கு எதிரான தொழிற்சங்க நடவடிக்கை வெற்றி

## ஜீவன் தொண்டமான் அறிவிப்பு

**ஹற்றன் நிருபர்**

ஹொரணை பெருந்தோட்ட நிர்வாகத்தின் கீழ் பணிபுரியும் தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தலைமையிலான இ.தொ.கா ஹொரணை பெருந்தோட்ட நிறுவனத்துக்கு எதிராக முன்னெடுத்த தொழிற்சங்க நடவடிக்கை வெற்றியளித்துள்ளது.

ஹொரணை பெருந்தோட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் தோட்டங்களுக்கு கடந்த காலங்களில் விஜயம் மேற்கொண்டிருந்த இ.தொ.காவின் பொது செயலாளர் ஜீவன் தொண்டமான் அங்கு தொழிலாளர்கள் மீது நடத்தப்படும் கெடுபிடிகள் தொடர்பில் ஆராய்ந்தார். பின்னர், ஹொரணை பெருந்தோட்ட நிர்வாகத்திற்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்ததுடன், ஒரு கிலோ தேயிலைத் தூளை கூட வெளியில் கொண்டு செல்ல அனுமதிக்கவில்லை. ஆகையால், இந்த தொழிற்சங்க நடவடிக்கையை அடுத்து பேச்சுவாரத்தைக்கு வந்தனர். இந்த பிரச்சினைகள் அட்டன் தொழில் திணைக்களத்தில் மேலதிக தொழில் ஆணையாளர் தலைமையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தலைமையிலான இ.தொ.காவுக்கும், ஹொரணை பெருந்தோட்ட நிர்வாகத்தினருக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றது.



இந்த பேச்சுவார்த்தையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் பாரத் அருள்சாமி, தேசிய அமைப்பாளர் ஏ.பி.சக்திவேல், இ.தொ.காவின் பிரதிநிதிகள், ஹொரணை பெருந்தோட்ட நிர்வாகத்தின் அதிகாரிகள், தொழிலாளர்கள், அட்டன் தொழில் திணைக்களத்தின் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இதன்போது, இலங்கை தொழிலாளர் காங்கிரஸால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு ஹொரணை பெருந்தோட்ட நிர்வாகத்தினர் சாதகமான பதில்களை வழங்கினர். தீர்மானிக்கப்பட்ட விடயங்களை எழுத்துமூலமாக அறிவிக்க ஹொரணை பெருந்தோட்ட நிர்வாகத்தினர் இணக்கம் தெரிவித்தனர். இந்த நிலையில், மேற்கொண்ட தொழிற்சங்க நடவடிக்கையை சுமூகமாக தீர்த்து வைத்து, வெற்றியை பெற்றுக்கொடுத்த இ.தொ.காவின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமானுக்கு தொழிலாளர்கள் நன்றிகளை தெரிவித்தனர்.

# தமிழ் கொலை




**(வத்துகாமம் நிருபர்)**

கண்டி கொழும்பு பிரதான பாதையில் அமைந்துள்ள கடுகண்ணாவ நகர பொலிஸ் நிலையப் பெயர் பலகையையே இங்கு காண்கிறீர்கள். இப்படி பொது இடங்களில் தமிழ் மொழிக் கொலைகள் நூற்றுக்கணக்கில் காணப்படுகின்றன. அதில் ஒன்றுதான் இது. இதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# நாவுலயில் கொரிய, ஜப்பானிய மொழிகள் கற்பிக்க நடவடிக்கை

**(வத்துகாமம் நிருபர்)**

மாத்தளை நாவுல பிரதேசத்தில் இயங்கும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தொழிற் பயிற்சி நிலையத்தில் கொரிய மற்றும் ஜப்பானிய மொழிகள் கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் சேவைகள் இராஜாங்க அமைச்சர் ரோகன திசாநாயக்க தெரிவித்தார்.

மேற்படி மத்திய நிலையத்திற்கு நேற்று முன்தினம் (6) கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்ட போது இவ்விடயத்தை தெரிவித்த அவர் மேலும் உரையாற்றுகையில்,

தற்போதைய ஜனாதிபதி, முன்னர் பிரதமர் பதவி வகித்த காலத்தில் இம்மத்திய நிலையம் அவரால் திறக்கப்பட்டது. ஆங்கிலம், தமிழ் போன்ற மொழிகள் இங்கு கற்பிக்கப்படுகிறது.

அதனை மேலும் அபிவிருத்தி செய்து சர்வதேச மொழிகள் கற்பிக்கும் இடமாக இதனை மாற்றியமைக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது. குறிப்பாக ஜப்பான் மற்றும் கொரிய மொழிகளை இங்கு கற்பிக்க நடவடிக்கை எடுக்க உள்ளளோம். இது இளைஞர்களுக்கு ஜப்பான் மற்றும் கொரியாவில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள வசதியாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

# சிவனொளிபாதமலை பருவ காலம் நேற்றுஆரம்பம்

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

சிவனொளிபாதமலை பருவ காலம் நேற்று அதிகாலை ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வில் 5 ம் திகதி அதிகாலை 5 மணிக்கு சுப வேலையில் கடந்த வைகாசி விசாகம் பௌர்ணமி தினத்துடன் நிறைவு பெற்று கல்பொத்தாவில ரஜமஹா விகாரையில் பிரதிஷ்டை செய்யப்பட்ட சமன் தெய்வம் மற்றும் ஆபரணங்கள் முழுவதும் வெளியே எடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் 6 ம் திகதி காலை நான்கு வழியாக சமன் தெய்வம் மற்றும் ஆபரணங்கள் பூஜை பொருட்கள் வாகன தொடரணியாக கொண்டு வரப்பட்டது. குருவிட்ட எரந்த வழியாகவும், பலாங்கொட பொகவந்தலாவ வழியாகவும், இரத்தினபுரி பெல்மடுள்ள, நோர்வூட் மஸ்கெலியா வழியாகவும், குருவிற்ற வழியாகவும் கொண்டு வரப்பட்டது.

நேற்று அதிகாலை 3.30 மணிக்கு நல்லதண்ணி நகரை வந்தடைந்த சமன் தெய்வத்தை நகரில் இருந்த இந்து பௌத்த மக்கள் வழிபட்டனர். அதனை தொடர்ந்து லக்சபான இராணுவ முகாம் இராணுவ அதிகாரிகள் மற்றும் சிப்பாய்கள் 70 பேர் விசேட பேழையில் வைத்து மலை உச்சிக்கு கொண்டு சென்றனர். அங்கு சிவனொளிபாதமலைக்கு பொறுப்பான பீடாதிபதி பெங்கமு தம்மதின்ன தேரர் சிவன் பாதத்தை வாசனை திரவியங்கள் கொண்டு கழுவிய பின்னர் அங்கு பிரதிஷ்டை செய்தார். அதன் பின்னர் 2022/2023 பருவ காலம் ஆரம்பமானது.



அங்கு உரையாற்றிய தலைமை தேரர் இம் முறை சிவனொளி பாதமலைக்கு வரும் யாத்திரிகர்கள் தனி வெள்ளை நிற உடை அணிந்து வருமாறு கூறினார். அத்துடன் தரிசனம் செய்ய வரும் யாத்திரிகர்கள் போதைப் பொருள் பாவனை மற்றும் மது பானங்கள் அருந்தி வர வேண்டாம் என கோரிக்கை முன் வைத்தார்.

அவ்வாறு வரும் எவராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரிக்கை முன் வைத்தார். இன்று ஆரம்பம் ஆகும் இந்த பருவ காலம் எதிர்வரும் 2023 வைகாசி விசாகம் பௌர்ணமி தினத்துடன் நிறைவு பெறும் என அவர் கூறினார். ஆரம்ப தினமான நேற்று காலை அதிகளவில் யாத்திரிகர்கள் கலந்து கொண்டனர்.

நாட்டில் அனைத்து பகுதிகளிலும் இருந்து யாத்திரிகர்கள் வருகை தந்திருந்தனர்.



எடியுகேசன் டிவலெப்மென்ட் போரம் EDUCATION DEVELOPMENT FORUM(EDF) அமைப்பினால் புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவ, மாணவிகளுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் விழா நேற்று கொழும்பு புதிய நகர மண்டபத்தில் அமைப்பின் தலைவர் தலைமையில் நடைபெற்றது. விழாவில் பிரதம அதிதியாக பேராசிரியர் ஜெமில் பசீலா அசான்(கொழும்பு பல்கலைக்கழகம் முகாமைத்துவ பீடம்) கௌரவ அதிதியாக தினகரன், வார மஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் ஆகியோர் கலந்து கொண்டு மாணவருக்கு பரில்களை வழங்கி வைத்தனர்.

படங்கள் சுதத் நிசாந்த,மொரட்டுவ மத்திய விசேட நிருபர்

# கிழக்கின் குரல்



# Mandous சூறாவளி தீவிரம் அடையும் சாத்தியம்!

## பொதுமக்களை அவதானமாக இருக்க அறிவுரை; - மட்டக்களப்பு வானிலை அவதான நிலைய பொறுப்பதிகாரி

**வெல்லாவெளி தினகரன் நிருபர்**

தென்கிழக்கு வங்காள விரிகுடாக் கடற்பரப்பில் திருகோணமலைக்கு வடகிழக்காக 320 கிலோ மீற்றர் தூரத்தில் நிலைகொண்டுள்ள தாழமுக்கம், மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து Mandous சூறாவளியாக தீவிரம் அடையக்கூடிய சாத்தியமுள்ளது. ஆகையால், மீனவர்களும் பொதுமக்களும் அவதானமாக இருக்குமாறு, மட்டக்களப்பு மாவட்ட வானிலை அவதான நிலையத்தின் பொறுப்பதிகாரி சுப்பிரமணியம் ரமேஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில், இச்சூறாவளியானது இன்று (08) வட தமிழ்நாடு, பாண்டிச்சேரி மற்றும் தென் ஆந்திரப் பிரதேச கரையோரப் பிரதேசங்களை அடையக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகவும், அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று (07) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார். நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் மேகமூட்டமான வானம் காணப்படுமென்று எதிர்பார்க்கப்படுவதுடன் வடக்கு, வடமத்திய மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் அவ்வப்போது மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. வடக்கு மாகாணத்திலும் திருகோணமலை மாவட்டத்திலும் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிகளவான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாகவும், அவர் தெரிவித்தார்.



இதேவேளை வடக்கு, வடமத்திய, கிழக்கு மாகாணங்களில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசுமென்று எதிர்பார்க்கப்படுவதுடன், மேல் மாகாணத்திலும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் சிறிதளவில் மழை பெய்யுமென்று எதிர்பார்க்கப்படுவதாகவும், அவர் தெரிவித்தார்.

மன்னாரிலிருந்து காங்கேசந்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட ஆழம் கூடிய, ஆழம் குறைந்த கடற்பரப்பிலும் தென்மேற்கு வங்காள விரிகுடாக் கடற்பரப்பிலும் பயணிப்போரும் மீனவ சமூகமும் மறு அறிவித்தல் வரை எதுவித நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறும், அவர் கேட்டுக்கொண்டார். இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களத்தால் வழங்கப்படும் எதிர்கால ஆலோசனைகளை பின்பற்றுமாறும், அவர் கேட்டுக்கொண்டார்.

# புதிய அரசியலமைப்பில் பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டுமெனக் கோரி ஆர்ப்பாட்டம்

**மட்டக்களப்பு விசேட நிருபர்**

மறுசீரமைக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பில் பெண்களின் உரிமைகள், பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டுமெனக் கோரி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று, மட்டக்களப்பு காந்தி பூங்காவில் நேற்று (07) நடைபெற்றது.

கிழக்கு சமூக அபிவிருத்தி மையமும் உள்ளூராட்சிமன்றங்களுக்கு தெரிவான பெண் அங்கத்தவர்களின் மையமும் இணைந்து ஏற்பாடு செய்த இவ்வார்ப்பாட்டமானது, 'பெண்களுக்கு எதிரான வன்முறை, பாரபட்சமின்றி அரசியலில் சம உரிமையைப் பெறுவதற்காக பெண்கள் ஒன்றுபடுவோம்' எனும் தொனிப் பொருளை கொண்டமைந்தது.

இவ்வார்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களிலுள்ள உள்ளூராட்சிமன்றங்களின் உறுப்பினர்களும் பெண் சமூக செயற்பாட்டாளர்களுமாக சுமார் 200 பேர் கலந்து கொண்டனர்.

52 சதவீதமாகக் காணப்படும் பெண்கள் சனத்தொகையில் உள்ளூராட்சிமன்றம், மாகாண சபை மற்றும் பாராளுமன்ற தேர்தல்களின் போது, 25 சவீதமாகக் காணப்படும் பெண் பிரதிநிதித்துவத்தை 50 சதவீதமாக அதிகரிக்க வேண்டும், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தீர்மானம் எடுக்கக்கூடிய சக்தியாக பெண்கள் மாற வேண்டும், பாலியல் சமத்துவத்துடனான உரிமையை வழங்க வேண்டும், கட்சி மற்றும் சமூகத்தில் அந்தஸ்து கொண்டவர்களுக்கு தேர்தலில் இடங்கொடாமல், உண்மையாக சேவை செய்வோரை இனங்கண்டு அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர்.

ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அனுப்புவதற்காக தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரில் கையெழுத்துகளும் இதன்போது சேகரிக்கப்பட்டன.

கிழக்கு மாகாணத்தில் தற்போது 43 உள்ளூராட்சிமன்றங்களில் 183 பெண் உறுப்பினர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# காட்டு யானை தாக்குதல்; புணானையில் ஒருவர் பலி

வாழைச்சேனை, புணானை பகுதியில் காட்டு யானையின் தாக்குதலில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக, வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (07) காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில், 60 வயது மதிக்கத்தக்க ஒருவரே உயிரிழந்துள்ளதாகவும் அந்நபர் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லையெனவும், பொலிஸார் தெரிவித்தனர். வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சடலம் வைக்கப்பட்டுள்ளதுடன், சடலத்தை அடையாளம் காணுவதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

# வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவு



**கிண்ணியா தினகரன் நிருபர்**

பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 1,000 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள், எகுத்தார் வித்தியாலயத்தில் வைத்து நேற்று முன்தினம் (06) வழங்கி வைக்கப்பட்டன.

IHHNL அமைப்பின் அனுசரணையுடன் அல்ஹித்மதுல் உம்மா பௌண்டேஷனினால் இவ்வுலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டதுடன், பலரும் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# அரசாங்க வைத்தியசாலைகளில் விஷக்கடிகளுக்கு மருந்து இன்மையால் நோயாளர்கள் அசௌகரியம்

## நாவிதன்வெளியில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

**பெரியநீலாவணை விசேட, காரைதீவு குறூப் நிருபர்கள்**

அரசாங்க வைத்தியசாலைகளில் விஷர் நாய், குரங்குக் கடிகள் உள்ளிட்ட விஷக்கடிகளுக்கு மருந்து இல்லாமையினால் நோயாளர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகுவதாகக் கூறி, வடக்கு மற்றும் கிழக்குப் பெண்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நாவிதன்வெளியில் இடம்பெற்றது.

மத்திய முகாம் பிரதேச வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று முன்தினம் (06) இடம்பெற்ற இவ்வார்ப்பாட்டத்தில், நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர்.

இதில் கலந்து கொண்டோர் தெரிவிக்கையில், "தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியால், பொதுமக்கள் பல்வேறு சுமைகளுடன் வாழ்கின்றனர். இச்சூழ்நிலையில் விஷர்க்கடியால் பாதிக்கப்படுபவர்கள், சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு செல்லும் பட்சத்தில், அங்கு மருந்து இன்மையால் திருப்பி அனுப்பப்படுகின்றனர். உணவுப் பொருட்களை சரியாக வாங்க முடியாது தத்தளிக்கும் இம்மக்கள், தனியார் மருந்தகங்களில் அதிகூடிய விலையில் மருந்துகளை வாங்குவதற்கு வழி தெரியாமல் உள்ளனர்" என்றனர்.

எனவே, அத்தியாவசிய மருந்துகளையும் சத்திர சிகிச்சைக்குத் தேவையான உபகரணங்களையும் பிரதேச வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்குரிய நடவடிக்கையை ஜனாதிபதி எடுக்க வேண்டுமெனவும், அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளருக்கு விழா

**துறைநீலாவணை நிருபர்**

கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் நகுலேஸ்வரி புள்ளநாயகத்தின் கல்விப் பணியைப் பாராட்டும் நிகழ்வும் 'நகுலம்' மணி விழா சிறப்பு மலர் வெளியீடும் பட்டிருப்பு தேசிய பாடசாலையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் இன்று (08) 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பட்டிருப்பு தேசிய பாடசாலையின் அதிபர் ரி.சபேசன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

கிழக்கு மாகாணத்தின் கல்வி வரலாற்றில் முதலாவது பெண் மாகாணக் கல்விப் பணிப்பாளர் எனும் பெருமையை தனதாக்கிய இவர், துறைநீலாவணை கிராமத்தைச் சேர்ந்தவராவார்.

# மட்டக்களப்பில் 21,141 விவசாயிகளுக்கு இலவசமாக யூரியா உரம் விநியோகம்





**மட்டக்களப்பு சுழற்சி நிருபர்**

மட்டக்களப்பில் 21,141 விவசாயிகளுக்கு சுமார் 1,057 மெற்றிக்தொன் யூரியா உரம் இலவசமாக வழங்குவதற்கு கமத்தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதைத் தொடர்ந்து, விவசாயிகளுக்கு யூரியா உரம் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், கிரான் கமநல சேவைகள் திணைக்களத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 1,608 விவசாயிகளுக்கு கிரான் கமநல சேவை கேந்திர நிலையத்தில் வைத்து யூரியா உரம் அண்மையில் வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரனின் வழிகாட்டுதலில், கமநல சேவைகள் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவி ஆணையாளர் கே.ஜெகன்நாத்தின் மேற்பார்வையில் இந்த உரம் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், மட்டக்களப்பில் 16 கமநல சேவைகள் கேந்திர நிலையங்களூடாகவும் யூரியா உரம் வழங்கப்படுகின்றது.

# காட்டு யானைகள் அட்டகாசம்

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட வண்ணாங்குழி மற்றும் வேதத்தீவு கிராமங்களில் நெற்பயிர்ச் செய்கை காட்டு யானைகளினால் சேதமாக்கப்பட்டு வருவதாகவும், இதனால் தாம் பெரும் நட்டத்தை எதிர்நோக்குவதாகவும், விவசாயிகள் தெரிவித்தனர்.

வயல்களில் இரவில் யானைகள் உலாவி நெற்செய்கைகளை சேதமாக்குவதாகத் தெரிவித்த விவசாயிகள், தமது வயல்களில் விதைப்புச் செய்து குடலைப் பருவத்தை அடைந்துள்ள நெற்பயிர்களை நேற்று முன்தினமும் (06) யானைகள் சேதமாக்கியுள்ளதாகவும் தெரிவித்தனர். இது இவ்வாறிருக்க, அயல் கிராமங்களான பன்வெட்டான், நன்னி, கங்கைக் காடுகளிலிருந்து பால்துறை ஆற்றைக் கடந்து பெருமளவான யானைகள் இரவில் தமது வயல்களுக்குள் பிரவேசிக்கின்றன. இந்நிலையில், அடிக்கடி மழை பெய்யும் நிலையில் இரவில் காவல் புரிந்து யானைகளை விரட்ட முடியாது சிரமப்படுவதாகவும், விவசாயிகள் தெரிவித்தனர்.

# சமத்துவ மக்கள் முன்னணியின் அங்குரார்ப்பண வைபவம்



**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**

மக்கள் கட்டுப்பாட்டிலுள்ள அரசியல் சக்தியாக இயங்கவுள்ள சமத்துவ முற்போக்கு முன்னணி அதன் அரசியல் அணியாக பரிணமிக்க இருக்கும் 'சமத்துவ மக்கள் முன்னணி' எனும் கட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வு, கல்முனை தனியார் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

சிரேஷ்ட வைத்தியர், சட்டத்தரணி வை.எல்.எம்.யூசுப்பை ஸ்தாபகத் தலைமையாகக் கொண்டு 'சமத்துவ மக்கள் முன்னணி' ஓர் அரசியல் கட்சியாக தனது செயற்பாட்டை ஆரம்பிப்பதாக, அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட கல்விமான்கள், புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்டோர் தற்கால சூழலில் முஸ்லிம் அரசியலில் உள்ள இடைவெளியை நிரப்புதல் உள்ளிட்ட காத்திரமான கருத்துக்களை முன்வைத்தனர்.

# வீரமுனை வாசிப்பு நிலையம் கையளிப்பு



வீரமுனை வாசிப்பு நிலையமானது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் சம்மாந்துறை பிரதேச சபைத் தவிசாளருமான ஏ.எம்.முஹம்மட் நௌஷாட்டினால் பொது மக்கள் பாவனைக்கு அண்மையில் கையளிக்கப்பட்டது. இவ்வாசிப்பு நிலையமானது மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு புதிதாக அமைக்கப்பட்டதாகும். (படம்: சவளக்கடை குறூப் நிருபர்)

# அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் மரக்கறி அறுவடை

**திராய்க்கேணி தினகரன் நிருபர்**

அட்டாளைச்சேனை பிரதேச செயலக வளாகத்தில் நடுகை செய்யப்பட்ட மரக்கறிச் செய்கையின் அறுவடை அண்மையில் நடைபெற்றது.

இப்பிரதேச செயலக வளாகத்தில் மரக்கறி, மிளகாய் உள்ளிட்ட மரக்கறிகள் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் உள்ளிட்ட பலர் இப்பயிர்ச்செய்கை அறுவடையில் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அறுவடை செய்யப்பட்ட மரக்கறிகளானவை, பிரதேச செயலக வளாகத்தில் தயாரிக்கப்பட்ட சேதனப் பசளையை மாத்திரம் பயன்படுத்தி செய்கை பண்ணப்பட்டதாகும்.



# அஞ்சலி பீடம் அமைக்க தீர்மானம்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மண்முனை தென்எருவில்பற்று பிரதேச சபையின் தவிசாளர் ஞா.யோகநாதனின் மறைவைத் தொடர்ந்து, அவரின் ஞாபகார்த்தமாக களுதாவளை பொது மயானத்தில் அஞ்சலி பீடம் அமைக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேச சபையின் விசேட அமர்வு, களுதாவளை பிரதேச சபையில் நேற்று முன்தினம் (06) இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

மண்முனை தென்எருவில் பற்று பிரதேச சபைத் தவிசாளர் ஞா.யோகநாதன் கடந்த முதலாம் திகதி காலமானார்.

# மாத்தறை மாவட்டத்தில் இன்று 08 மணி நேர நீர்வெட்டு

*பேருவளை விசேட நிருபர்*

மாத்தறை மாவட்டத்திலுள்ள மாலிம்பட நீர்த் தாங்கி முதல் இஸ்ஸதீன் நகர நீர்த்தாங்கி வரை நீரைக் கொண்டுசெல்லும் நீர்க்குழாயில் அத்திய வசிய திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவுள் ளதால், இன்று 08ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10 மணி முதல் பி.ப. 6 மணி வரையிலான 8 மணிநேர நீர் விநியோகத்தடை பின்வரும் பகு திகளில் அமுலாகும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

மடிஹ, கம்புறுகமுவ, கொட்டவில, யென்வெல, மிரிஸ்ஸ, ஹெவகமந்துவ, காலி வீதி கம்புறுகமுவ முதல் மிரிஸ்ஸ வரையிலான பகுதிகளில் நீர் விநியோகம் தடைப்படும்.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடி காலமைப்பு சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கன மாக பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது. இதுபற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

# மிஹிந்தலை பிரதேச வருடாந்த இலக்கிய கலை விழா

*திறப்பனை தினகரன் நிருபர்*

மிஹிந்தலை பிரதேச செயலகத்தின் வருடாந்த இலக்கிய கலை விழா அண்மையில் மிஹிந் தலை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் அனுராத நாயக்க பண்டார தலைமையில் பிரதே சத்தின் சிரேஷ்ட கலைஞர்களின் பங்குபற்றுத லுடன் அனைத்து மதத்தினரின் ஆசிர்வாதத்துட னும் நடைபெற்றது.

அனைத்து கலைஞர்களையும் அடித்தளமாகக் கொண்டு இந்த கலை விழா நடத்தப்பட்டதாக மிஹிந்தலை பிராந்திய கலை விழாவை ஏற்பாடு செய்த மிஹிந்தலை கலாசார உத்தியோகத்தர் தெரிவித்தார்.

மேற்படி கலை விழாவின் போது பாடசாலை நூலகங்களுக்கும் புத்தகப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் புதிய கலைஞர்க ளுக்கான காசோலை வழங்கல் நிகழ்வும் இங்கு இடம் பெற்றது. இதன் கீழ் அடுத்த ஆண்டு மாவட்ட கலை விழாவை நடத்தவும் திட்டமி டப்பட்டுள்ளது. அத்துடன் பிரதேசத்தின் மூத்த கலைஞர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ் வுகளும் இங்கு இடம் பெற்றன.

இந்நிகழ்வில் வண்ணமயமான நடனங்கள், இசைக்கருவிகள் மற்றும் கலாசார கருவிகளைக் கொண்டிருந்தது. மிஹிந்தலை பிராந்திய கலைவி ழாவின் போது பாடசாலை மற்றும் திறந்த பிரிவு களிலிருந்து 39 சிறுவர்கள் பரிசில்களையும் சான் றிதழ்களையும் பெற்றுக்கொண்டனர்.

# ஸ்ரீலங்கா ஐக்கிய முன்னணி கட்சியின் தலைவரை ஜனாதிபதியின் இணைப்பாளராக நியமிக்க வேண்டுகோள்



ஜனாதிபதியின் முஸ்லிம் விவகார இணைப்பாளராக ஸ்ரீலங்கா ஐக்கிய முன்னணி கட் சியின் தலைவர் மௌலவி சித்தீக் முஹம்மத் சதீக்கை (அமீனி) அக் கட்சியின் தேசிய அமைப்பா ளர் ஜவுஸ் பழில் ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் தெரிவித்துள் ளார். அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது, ஸ்ரீலங்கா ஐக்கிய முன்னணி கட்சித் தலைவர் சித்தீக் முஹம்மத் நல்லி ணக்கத்துடன் செயற்படக் கூடியவர். இன பாகுபாடு அற்று அனைத்து இன மக்களுட னும் பண்பாக பழகக் கூடியவர்.

அத்தோடு சமூக சிந் தனையாளர், பொறுப் புகளை சிறந்த முறையில் நிறை வேற்றக் கூடியவர். அநீதிகளுக்கு குரல் கொடுப்பவர் நீதியா கவும் நிதானமாகவும் செயல்படக் கூடியவர் என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள் ளது.


**வர்த்தக பெயரை மாற்றுதல்**

கொழும்பு-14, கிராண்ட்பாஸ் நாகலகம் வீதி, இல. 284 எனும் நடத்திச் செல்லப்பட்ட 'எஸ். என்ட்.எஸ். அடகு நிலையம் 'சூரிய ஆரச்சி சஹபுத்ரயா' என மாற்றம் செய்துள்ளதாக, குறித்த அடகு நிலையம் இதன் பிறகு 'சூரிய ஆரச்சி சஹ புத்ரயோ' என்று நடத்திச் செல்லப்படுவதாகவும் இலங்கை குடியரசுக்கும் மக்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

- **சூரிய ஆரச்சி சஹ புத்ரயோ**

## மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் பினான்ஸ் பி.எல்.சி.யின் பின்வரும் கிளைகளில் அல்லது சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு, மீட்கப்படாத தங்க நகைகள் இல.123, ஓரபிபாச மாவத்தை, கொழும்பு 10. என்னும் முகவரியில் பின்வரும் தினங்களில் மு.ப. 9.30 - 2.00 தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| இத் திகதி வரை அடகு வைக்கப்பட்டவை | இத் திகதி வரை மீட்கப்படாதவை | ஏல விற்பனைத் திகதி |
|---|---|---|
| 03/08/2022 | 02/09/2022 | 28/12/2022 & 03/01/2023 |

**கிளைகள் :** அனுராதபுரம், அம்பலங்கொடை, அளுதகம, அமபாறை, அவிசாவளை, எஹலியகொடை, எலக்கந்தை, எம்பிலிப்பிட்டி, கந்தானை, களுத்துறை, கதுருவெல, கடுவெல, கட்டுகஸ்தோட்டை, களனி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், குருவிட்ட, கொட்டாஞ்சேனை, கொட்டாவை, கொச்சிக்கடை, கம்பஹா, காலி, கிரியுல்ல, ஜா-எல, தலவத்துகொடை, திஸ்ஸமஹாராம, திருகோணமலை, தம்புள்ளை, நுகேகொடை, நாரம்மல, நிட்டம்புவ, நிக்கவெரட்டிய, பாணந்துறை, பெல்மதுல்ல, பிலியந்தலை, பிரதான கிளை, பதுளை, பத்தரமுல்லை, பண்டாரவளை, பொரளஸ்கமுவ, கண்டி, மஹர, மஹரகம, மத்துகம, மட்டக்களப்பு, மஹியங்கனை, மாவத்தகம, மாரவில, மாத்தளை, மாத்தறை, மாலபே, மினுவாங்கொடை, நீர்கொழும்பு, மொறட்டுவை, யாழ்ப்பாணம், இரத்மலானை, இரத்தினபுரி, ராஜகிரிய, ராகம, வத்தளை, வரக்காப்பொல, வவுனியா, வாரியபொல, வெள்ளவத்தை, வென்னப்புவ, சிலாபம், ஹொரணை, நுவரெலிய கிளை, தெகிவளை

எவ்வித மேலதிக அறிவித்தலுமின்றி, ஏல விற்பனையை இரத்து செய்யவும் பிற்போடவும் அல்லது ஏல விற்பனை நடத்தப்படும் இடத்தை மாற்றவும் சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பி.எல்.சி. உரிமை கொண்டுள்ளது.

விலைமனு சமர்ப்பிக்கப்பட்ட பொருள்கள் அன்றே பணம் செலுத்தி மீட்கப்பட வேண்டும்.

**சிட்டிஸன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பீஎல்சீ**
இல.123, ஓரபிபாஷா மாவத்தை, கொழும்பு 10.
தொ.எண் - 0117 388 388


## உள்ளூராட்சித் திணைக்களம் – கிழக்கு மாகாணம்

### 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தின் கீழான கூட்ட அறிவித்தல்

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகிய நாகராசா மணிவண்ணன் ஆகிய நான், 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் (திருத்தச்)சட்டத்தின் 66(எ) ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 66(இ) ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபை தவிசாளர் பதவி வெற்றிடத்திற்கு புதிய தவிசாளரை தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் 2022.12.23 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபையின் சபா மண்டபத்தில் கூட்டப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன். மேலும் இக்கூட்டங்கள் தொடர்பான அறிவித்தல் என்னால் 2309/11 ஆம் இலக்க 2022.12.06 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமான பத்திரிகையில் (அதி விசேடம்) விடுக்கப்பட்டுள்ளது என்பதனையும் அறியத்தருகின்றேன்

**நா. மணிவண்ணன்,**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**கிழக்கு மாகாணம்.**

## பெறுகை அறிவித்தல்

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

### 2022/ 2023 ஆண்டிற்காக உணவக கட்டிடத் தொகுதியில் விற்பனை கூடங்களை நடத்திச் செல்லல்

1. தங்கி சிகிச்சைபெறும் நோயாளர்கள், வைத்தியசாலைக்கு வருகைதரும் உறவினர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்களின் பாவனைக்காக நுகேகொட, தலபத்பிட்டியவில் அமைந்துள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் உணவக கட்டிடத் தொகுதியில் கீழ்க்காணும் விற்பனை கூடங்களை நடத்திச் செல்லக்கூடிய தகைமை உடைய இலங்கைப் பிரஜைகள், வர்த்தக நிறுவனங்கள், உற்பத்தியாளர்கள் (ஒப்பந்தக்காரர்கள்) இடமிருந்து ஒரு வருட காலத்திற்கு தேசிய போட்டி விலைமனுக் கோரலில் கீழ் பெறுகைக் குழுத் தலைவரால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | இலக்கம் | விற்பனை கூடத்தின் பெயர் | குறைந்தபட்ச மாதாந்த வாடகை ரூபா | விண்ணப்பப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 1 | Q-538/22 | சில்லறைப் பொருட்கள் விற்பனை கூடம் | 208,000.00 | 3,500.00 |
| 2 | Q-539/22 | பழச்சாறுகள் விற்பனை கூடம் | 78,000.00 | 3,500.00 |
| 3 | Q-540/22 | பேக்கரி உற்பத்திகள் விற்பனை கூடம் | 235,000.00 | 3,500.00 |
| 4 | Q-541/22 | சமைக்கப்பட்ட உணவு விற்பனை கூடம் | 156,000.00 | 3,500.00 |

2. இது சம்பந்தமாக ஆர்வம் காட்டுகின்ற வழங்குநர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் கணக்காளருக்கு மீளளிக்கப்படாத விண்ணப்பப் படிவக் கட்டணத்தை செலுத்தி பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டு மற்றும் நிறுவனத்தின் கடிதத் தலைப்புடன் பணிப்பாளருக்கு விடுக்கப்படும் எழுத்துமூல வேண்டுதலை வழங்கல்கள் பிரிவிற்கு சமர்ப்பித்து 28.12.2022 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் கேள்விப் பத்திரங்களை வழங்கல்கள் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.
3. கேள்வி ஆவணங்களை இரு பிரதிகளுடன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிட்டு வேறுவேறு உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் தனி உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
4. குறித்தவாறு கையொப்பமிட்டு உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரையை இட்டு விண்ணப்பங்களை கடித உறையொன்றில் உள்ளடக்கி அதன் இடது பக்க மேல் மூலையில் '2022/2023ம் ஆண்டிற்காக ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை.......... (குறித்த விற்பனைக் கூடத்தின் பெயர்) விற்பனை கூடத்தை நடத்திச் செல்லும் ஒப்பந்தம்' என்று குறிப்பிட்டு 2022.12.29ம் திகதி மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு இங்கு கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அம்முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நேரம் முடிவடைந்தவுடன் விண்ணப்பங்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரி அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு விண்ணப்பங்கள் திறக்கப்படும் கூட்டத்திற்கு சமுகமளிக்கலாம். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் திறக்கப்படாமலேயே மீளளிக்கப்படும்.
5. குறித்த கேள்விகளை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது.
6. உத்தேச விண்ணப்பதாரிகளுக்கு கேள்விப் பத்திரங்களை எந்தக் கொடுப்பனவும் இன்றி ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வழங்கல்கள் பிரிவில் பரீட்சிக்க முடியும்.
7. மேலதிக விபரங்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வழங்கல்கள் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இலக்கம்: 0112778610 - நீடிப்பு 3142 அல்லது 0112778624

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய.**



## கேள்வி அறிவித்தல்

## அரச அச்சக கூட்டுத்தாபனம்

**SPC/SUP/F1/002/2022/10**

## SELLING OF WASTE PAPER & WEB TUBES

பின்வரும் அம்சங்களின் விற்பனைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| அம்ச இல. | அம்சம் | கேள்வி குறிப்பீட்டு இல. | விலைமனு உத்தரவாதம் (ரூபாவில்) | செயற்பாட்டு உத்தரவாதம் (ரூபாவில்) |
|---|---|---|---|---|
| 01. | Mixed Paper Pieces | SPC/SUP/F1/002/2022/10 | 25,000 | 200,000 |
| 02. | Printed Forms | | | 200,000 |
| 03. | White Paper/White Paper Pieces | | | 100,000 |
| 04. | Lottery pieces & Printed Paper pieces | | | 100,000 |
| 05. | Board pieces & Printed Paper pieces | | | 25,000 |
| 06. | Cover Paper (all the papers and boards used to cover the web reels) | | | 25,000 |
| 07. | Web Tubes | | | 25,000 |

2022.12.08 ஆம் திகதியன்று ஆரம்பித்து 2022.12.29 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 3000 ரூபாவைச் செலுத்திய பின்னர், எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் பாதுக்க, பனாலுவ, அரச அச்சக கூட்டுத்தாபன வழங்கல் பிரிவிலிருந்து விலைமனு ஆவணங்களை இலவசமாக பரீட்சித்து அவைகளை கொள்வனவு செய்யலாம்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **SPC/SUP/F1/002/2022/10** என அடையாளமிடப்பட்டு 2022.12.30 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு முன்னராக கிடைக்கும் வகையில் வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

2022.12.30 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு விலைமனுக்களை மூடிய பின்னர், நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகவே அவைகள் திறக்கப்படும்.

மேலதிக தகவலுக்காக, 0112 75 75 01 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக வழங்கல் முகாமையாளருடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அரச அச்சக கூட்டுத்தாபனம்,**
**பனாலுவ, பாதுக்க.**

## பெறுகை அறிவித்தல்

**சுகாதார அமைச்சு**

**மாவட்ட பொது வைத்தியசாலை - நீர்கொழும்பு**

### மருத்துவ உபகரணங்கள் வழங்குதல், பொருத்துதல் மற்றும் பராமரித்தல் - 2022

நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலை, பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் மருத்துவ உபகரணங்களை வழங்குதல், பொருத்துதல் மற்றும் பராமரித்தல் எனும் வேலைக்காக 2022 டிசம்பர் மாதம் 09ஆம் திகதி முதல் 2022 டிசம்பர் மாதம் 28ஆம் திகதி பி.ப. 1.30 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | உபகரணத்தின் பெயர் | எண்ணிக்கை | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| 01 | Bronchoscope with Thoracoscope System | 01 | 460,000.00 |
| 02 | Level 3 sleeo Study System | 01 | 40,000.00 |

I. விலைமனு ஆவணங்களை 2022 டிசம்பர் 09ஆம் திகதி முதல் 2022 டிசம்பர் 28ஆம் திகதி பி.ப. 12.30 மணி வரையில் நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.
II. விலைமனு ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் மற்றும் திகதி: 2022-12-28ஆம் திகதி பி.ப. 01.30
III. விலைமனுக்கள் திறக்கப்படுதல் - 2022-12-28ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு

01. பெறுகை நடவடிக்கைகளுக்கான மீளளிக்கப்படாத கட்டணமாக 2500.00 ரூபாவை நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலை சிறாப்பருக்குச் செலுத்திய அல்லது இலங்கை வங்கியின் 7040797 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைத்து குறித்த பற்றுச்சீட்டை விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

02. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு இயைபான உபகரணங்களை இலங்கைச் சந்தைக்கு வழங்குவதற்காக உற்பத்தியாளர்கள் அல்லது உற்பத்தியாளர்களினால் பெயரிடப்பட்ட முகவர் / அதிகாரபூர்வ பிரதிநிதிகள் மட்டுமே தகைமை பெறுவர்.

03. விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் மருத்துவ உபகரணங்களின் மாதிரிகளுக்கு தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் செல்லுபடியாகும் சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல் கட்டாயமாகும்.

04. நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலையினால் ஏற்றுக்கொள்ளப்படாத விலைக்கோரல் ஆவணங்கள் மற்றும் விலைக்கோரல் ஆவணக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாத விலைக்கோரல் ஆவணங்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்களை பதிவுத் தபாலில் ''தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, நீர்கொழும்பு'' எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

அல்லாவிடில் நேரில் கொண்டுவந்து இந்த வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த உபகரணத்தின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

விலைமனுக்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பிராந்திய பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**மருத்துவர் ஜீ.பீ.என். பத்திரன,**
**பணிப்பாளர்,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**நீர்கொழும்பு.**

**நிதி அமைச்சு**

## இலங்கை சுங்கத் திணைக்களம்

### ஐந்து வருடங்களுக்கு உத்தேச களஞ்சிய அரங்கிற்கான கேள்வி கோரல்

### தேசிய போட்டி கேள்வி கோரல் (NCB)

இலங்கை சுங்கத்திற்கு உத்தேச களஞ்சிய அரங்கிற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

02. கேள்வியை சமர்ப்பிப்பதற்கு தகைமை பெறுவதற்கு கேள்விதாரர்:
   i. களஞ்சிய அரங்கின் நோக்கம் கைப்பற்றப்பட்ட அல்லது/ மற்றும் அரசுடமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்களை களஞ்சியப்படுத்துவதற்காக
   ii. காணியின் அளவு - 3 ஏக்கர் (குறைந்தபட்சம்) ஆக இருத்தல் வேண்டும்.
   iii. தூரம் - கொழும்புத் துறை முகத்தில் இருந்து பத்து கிலோ மீற்றருக்குள் இருத்தல் வேண்டும்.
   iv. பிரவேச வழி:- 40 அடி கன்டெயினர் வாகனத்திற்கான இலகுவான பிரவேசபாதை இருத்தல் வேண்டும்.
   v. பாதுகாப்பு முழுப் பிரதேசமும் குறைந்த பட்சம் பன்னிரெண்டு அடி உயரமான மதில் மற்றும் மேலும் 10அடி உயரமான கம்பிவலையினால் பாதுகாப்பு வழங்கப்படல் வேண்டும். வளாகத்திற்கு 24 மணி நேரம்/ 07 நாட்கள் பாதுகாப்பு சேவையொன்றை வழங்குவதற்கு இயலுமாதல் வேண்டும். 24 மணிநேரம் செயற்படும் CCTV பாதுகாப்பு அமைப்பை வழங்குதல் வேண்டும்.
   vi. களஞ்சிய - தார் இடப்பட்டிருத்தல் வேண்டும்.
   vii. ஏற்றும் மற்றும் இறக்கும் வசதிகள் உள்ளிடல் - வேண்டுதல் அடிப்படையில் fork lifts, இறக்குவதற்கு மற்றும் ஏற்றுவதற்கு ஸ்டிக்கர் மற்றும் வாகனங்களை கொண்டு செல்லக்கூடிய வண்டிகளைத் தேவைப்படும்போது வழங்குதல்.
   viii. சேவைக்காலம் - இருபத்தி நான்கு மணிநேரமும் வழங்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.
   ix. மனிதவளங்கள் - பாவனையாளர்களைக் கவரும் ஊழியர் குழாம் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   x. அலவலக பிரதேசம் - 3000 சதுர அடிக்குத் குறைந்த அலுவலக வசதிகள் இருத்தல் வேண்டும். உணவகம் மற்றும் இணைந்த குளியல் அறையுடன் 04 அதிகாரிகளுக்கு தங்குவதற்கு வசதியுடைய 02 அறைகளை கொண்டிருத்தல் வேண்டும்.
   xi. வாகனங்களை நிறுத்தும் வசதிகள் ஊழியர் குழாம் மற்றும் சேவை வழங்குநர்களின் குறைந்தபட்சம் 25 வாகனங்களை அலுவலக பிரதேசத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கும் இடவசதிகள் இருத்தல் வேண்டும்.
   xii. களஞ்சிய பிரதேசம் - உள்ளடக்க பிரதேசம் 50,000 சதுர அடி (184 பேர்ச்) இற்கு குறையாது இருப்பதுடன் ஒப்பந்தத்தை வழங்கும் வேளையில் 50,000 சதுர அடி அளவு இருக்காது விடின் ஒப்பந்தம் வழங்கி ஒரு மாதத்திற்குள் (30 நாட்கள்) உள்ளடக்க பிரதேசத்தை தயாரித்து வழங்குதல் வேண்டும். மிகுதி பிரதேசம் உள்ளடக்கத்துடன் இருத்தல் வேண்டும். உள்ளடக்க பிரதேசம் குறைந்தபட்சம் 10,000 சதுர அடி உயரம் 06 மீட்டராக இருத்தல் வேண்டும்.
   xiii. தீ மற்றும் இயற்கை அனர்த்தங்கள் உட்பட முமையான காப்பறுதி காப்பீடு வழங்கப்படல் வேண்டும்.
03. கேள்வி அட்டவணையில் 1ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள ஆலோசனைக்கு அமைவாக கேள்வி ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். சகல கேள்விகளும் ரூபா 50,000.00 கேள்வி பிணையொன்றுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்களுக்கு ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றை, எழுத்து மூல விண்ணப்பம் ஒன்றை சுங்கப் பணிப்பாளர் (சேவை வழங்குதல்) இடம் அனுப்புவதன் மூலம் மற்றும் சகல கேள்வி ஆவணத் தொகுதி சார்பாகவும் ரூ. 2500.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பின்னர் 2022 டிசம்பர் 09 வெள்ளிக்கிழமை பி.ப. 9.30 முதல் 2022 டிசம்பர் 26 வெள்ளி பி.ப. 3.00 வரை கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாக பிரதம காசாளர், 02ம் மாடி, இலங்கை சுங்கம், இல. 40, மெயின் வீதி, கொழும்பு-11 என்ற முகவரியில் செலுத்துதல் வேண்டும்.
05. சகல கேள்விகளும் சுங்கப் பணிப்பாளர் (சேவை வழங்குதல்) இற்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் 2022 டிசம்பர் 28 புதன் பி.ப. 2.00 இற்கு அல்லது அதற்கு முன் சேவை வழங்கும் பிரிவில் உள்ள கேள்விப் பெட்டியில் வைப்புச் செய்தல் வேண்டும். கேள்வி வைத்தல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும். சுங்கப் பணிப்பாளர் (சேவை வழங்குதல்) அலுவலகத்திற்கு வருகை தருவதற்கு ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும். தாமதமாக கிடைக்கும் கேள்விகள் ஏற்கப்படமாட்டாது.
06. ஆர்வமுள்ள கேள்வி தாரர்களுக்கு மேலதிக தகவல்களை சுங்கப் பணிப்பாளர் (சேவை வழங்கல்) 06ஆம் மாடி, இலங்கைச் சுங்கம், இல. 40, மெயின் வீதி, கொழும்பு-11 என்ற முகவரியில் தொ.பே. இல. 0112221680 ஊடாக அல்லது 0112221674 பெக்ஸ் இல. 0112436096 மூலம் பெற்றுக்கொள்ளலாம். 2022 டிசம்பர் 09ஆம் திகதி வெள்ளி முதல் 2022 டிசம்பர் 26 திங்கள் வரை வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
07. ஒப்பந்தத்தை வழங்குதல் பற்றிய சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**பெறுகைக் குழுத் தலைவர்**
**இலங்கை சுங்கத் திணைக்களம்**
**இல. 40, மெயின் வீதி, கொழும்பு-11**
**தொலைபேசி 011-2221680/ பெக்ஸ் 011-2436096**

# அறிவித்தல்

## இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனத்தின் பின்வரும் வெற்றிடங்களுக்காக இலங்கை விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. உதவிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) - சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (HM 1-1) – 01 பதவி**

**சம்பள அளவு:**
HM – 1-1 - ரூபா 80, 295 – 15 x 2270 – 114,345/- அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

(2022-01-01) திகதியில் உரித்தாகும் ஆரம்ப சம்பளம் 80,295.00 ரூபாவாகும்.

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் / வியாபார முகாமைத்துவம் / வர்த்தகமானி பாடங்களில் பெற்றுக்கொண்ட பட்டம்

அத்துடன்

இயைபுடைய பாடத்துறையில் பட்டப் பின்படிப்பு (Masters) பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது பதவிக்கு இயைபான பாடத்துறைக்குப் பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனம் சார்ந்த அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

மற்றும்

அரச, அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. முகாமைத்துவ சேவை வகுதியில் (MM) 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் இயைபுடைய விடயத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது:**
35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**02. உதவிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்) - சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (HM 1-1) – 01 பதவி**

**சம்பள அளவு:**
HM – 1-1 - ரூபா 80, 295 – 15 x 2270 – 114,345/- அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் திணைக்களத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளும் உரித்தாகும்.

(2022-01-01) திகதியில் உரித்தாகும் ஆரம்ப சம்பளம் 80,295.00 ரூபாவாகும்.

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவம் / சட்டம் / வியாபார முகாமைத்துவம் / அரச நிர்வாகம் / வியாபார நிர்வாகத்தில் பெற்றுக்கொண்ட பட்டம்

அத்துடன்

இயைபுடைய பாடத்துறையில் பட்டப் பின்படிப்பு (Masters) பட்டத்தைப் பெற்றிருத்தல் அல்லது பதவிக்கு இயைபான பாடத்துறைக்குப் பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனம் சார்ந்த அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

மற்றும்

அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 15 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. முகாமைத்துவ சேவை வகுதியில் (MM) 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட காலம் இயைபுடைய விடயத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது:**
35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஏனையவை:**

**அனைத்து விண்ணப்பதாரர்களும்**

a. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
b. பதவிக்குரித்தான வேலைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்காக நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் வேலை செய்வதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.
c. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்க்கும் முறை:**
நியமன அதிகாரியானால் நியமிக்கப்படும் குழுவொன்றினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு சேர்த்துக்கொள்ளும் விதிமுறைக்கமைய சேர்த்துக்கொள்ளப்படுவர். ஊழியர் சேமலாப நிதிக்கு நியமனம் பெறுபவர் 8%, பணிகொள்வோர் 12% எனும் வகையில் பங்களிப்புப் பணம் செலுத்துதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு நியமனம் பெறுபவரின் சம்பளத்தின் 3% இற்குச் சமமான தொகை செலுத்தப்படும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியாயாதிக்கச் சபைகளில் சேவையாற்றும் விண்ணப்பதாரர்கள் விண்ணப்பப் படிவங்களை தமது நிறுவனத்தின் பிரதானியின் ஊடாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரரின் முழுமையான சுய தரவுகள் மற்றும் சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட புகைப்படப் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தம்மால் சுயமாகத் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவங்களை தலைவர், ஆயுர்வேத ஔடதங்கள் கூட்டுத்தாபனம், இல. 94, பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம எனும் முகவரிக்கு 2022-12-23ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது sladcvacancies@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். உங்களது தொலைபேசி இலக்கம் மற்றும் உங்களைப் பற்றி விசாரிக்கக் கூடிய உறவினரல்லாத இருவரின் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கத்தை விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட பதவிகள் பலவற்றுக்கு விண்ணப்பிப்பதானால் வெவ்வேறான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தபாலில் தொலைந்து போகும் மற்றும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பில் கூட்டுத்தாபனம் பொறுப்புக்கூற மாட்டாது.

**தலைவர்,**
**இலங்கை ஆயுர்வேத ஔடதங்கள் கூடுத்தாபனம்.**

# விலைமனுக்கோரல்

கண்டி கடவத் ஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபைக்குப் பின்வரும் அலுவலக உபகரணங்களை வழங்குவதற்கென விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

**தேவையான கணினிகள்**

**Desk Top Computer**

Intel core i7 processor (7th or above Generation) 8 GB RAM / 1 TB SATA HDD / 19" LED Monitor/ Genuine Windows 10 pro 64 bit / 3 years comprehensive warranty/ On Board nic / sound /DVD Writer

**Lap Top Computer**

Intel core i7 processor (7th or above Generation) 8 GB RAM / 1 TB SATA HDD / On Board nic/ sound/ usb / vga / Genuine Windows 10 pro 64 bit / comprehensive warranty / DVD Writer

**Online Server Computer**

16 GB DDR 4 Upgradable to 32 GB / Hard Disc Minimum 128 GBSSD (SATA)
Intel R i7 – 10870 (12 MB L3 cache 3.2 GHz base or above) / 19" LED Monitor / 1KVA UPS System LQ -300 RE Above / Epson

**Laser Printer A4**

Speed – 18 or above PPM / Technology – Laser /Colour – Black / Warranty

**UPS இயந்திரம்**

Capacity – 1200 KV / Backup time – 15 – 25 mins

**ஏனையவை**

Web cam / Sub Buffer / Normal Wireless mick/ coler mick

மீளளிக்கப்படாத ரூ. 1000.00 இற்கான தொகையை அலுவலக நேரத்தில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை) காசாளரிடம் செலுத்தி உரிய விலைமனு பற்றிய ஆவணங்களை 2022.12.28ஆம் திகதி வரை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

விலைமனுக்களை முதற்பிரதி, இணைப்பிரதி என வேறாக்கிப் பின்னர் ஒரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் அது பற்றிக் குறிப்பிட்டு, 2022.12.29 ஆம் திகதி 11.00 மணிக்கு முன்னர் செயலாளர், கண்டி கடவத் ஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபை, அம்பிட்டிய என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது அவற்றை அம்பிட்டிய பிரதம அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இடுதல் வேண்டும். 2022.12.29 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்குப் பிரதேச சபையின் அம்பிட்டிய பிரதம அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். அதில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவர் கலந்துகொள்ள முடியும்.

விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும், நிராகரிக்கும் அதிகாரம் டென்டர் சபைக்கு உரியது.

**தொலைபேசி இலக்கம்: 0812241222**
**செயலாளர்,**
**கண்டி கடவத் ஸத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபை,**
**அம்பிட்டிய.**

# பெறுகை அறிவித்தல்

## பாதுகாப்பு சேவைகளை வழங்கல் – 2023/2024
## இலங்கை பிக்சு பல்கலைக்கழகம்
## விலைமனுக்களுக்கான அழைப்பு

**Bid Reference: BUSL/GAS/15/22/01**

ஒரு (01) வருட காலப்பகுதிக்கு இந்த பல்கலைக்கழகத்திற்காக பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்காக தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் இலங்கை பிக்சு பல்கலைக்கழக, பல்கலைக்கழக பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

**பாதுகாப்பு சேவைகளை வழங்கும் நிறுவனங்கள்:**

I. வியாபார பெயர்கள் கட்டளைச்சட்டம் மற்றும் பாதுகாப்பு அமைச்சுடன் பதிவு பெற்ற நிறுவனமொன்றாகவிருத்தல் வேண்டும்.

II. அரச நிறுவனமொன்றிற்கு/நியதிச்சட்ட சபையொன்றிற்கு அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றிற்கு பாதுகாப்பு சேவைகளை வழங்குவதில் 3 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2022.12.08 ஆம் திகதியிலிருந்து 2022.12.28 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் 2,500 ரூபாவை மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக (விலைமனு ஆவணத்தை அலுவலக நேரங்களில் இலவசமாக பரீட்சிக்கலாம்) செலுத்திய பின்னர், அநுராதபுரம், புத்தளம் வீதி, இலங்கை பிக்சு பல்கலைக்கழக பொது நிருவாகத்திற்கான சிரேஷ்ட உதவி பதிவாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

இலங்கையில் செயற்படும் புகழ்வாய்ந்த வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டதும் 130,000 ரூபா பெறுமதியானதும் நிபந்தனையற்றதுமானதொரு விலைமனுப்பிணையொன்றுடன் விலைமனுக்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் விலைமனுப்பிணையானது விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 105 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ளவாறான விலைமனுப்பிணையுடன் இணைக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

2022 டிசம்பர் 29 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு முன்னராக கிடைக்கும் வகையில் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் ஒன்றில் பதிவுத் தபாலில் தலைவர், பல்கலைக்கழக பெறுகைக் குழு என கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது இலங்கை பிக்சு பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கள் 2022 டிசம்பர் 29 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு திறக்கப்படுமென்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியானவர் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார். மேலதிக தகவலை வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் பொது நிருவாகத்திற்கான சிரேஷ்ட உதவி பதிவாளரிடமிருந்து 025-2236760 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் மூலமாக பெற்றுக் கொள்ளலாம்.

2022 டிசம்பர் 22 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு இலங்கை பிக்சு பல்கலைக்கழக மூதவையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

**தலைவர்,**
**பல்கலைக்கழக பெறுகைக் குழு,**
**இலங்கை பிக்சு பல்கலைக்கழகம்,**
**புத்தளம் வீதி, அநுராதபுரம்.**
**08.12.2022.**

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

**106 கார்கள் விற்பனைக்கு**

SP JF-1256 Hyundai Matrix car, 2001, கூடிய விலைக் கோரிக்கைக்க , வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0714542958. 075650

**108 நிஸான் கார் விற்பனைக்கு**

WP GC-2591 Nissan Sunny, 1997, car கூடிய விலைக் கோரிக்கைக்கு, வெலிபல் பினான் ஸ் பிஎல்சி, 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0714542958. 075651

**110 மாருதி கார்கள் விற்பனைக்கு**

WP KX-0875 Maruti Alto, 2013, car கூடிய விலைக் கோரிக்கைக்கு, வெலிபல் பி னான் ஸ் பிஎல்சி, 310 , காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0714 5 42958. 075666

**112 மெஸ்டா கார்கள் விற்பனைக்கு**

WP CAQ-1818 Mazda 6, 2015, car கூடிய விலைக் கோரிக்கைக்கு, வெலிபல் பினான் ஸ் பிஎல்சி, 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0714542958. 075667

**113 சுசூகி கார்கள் விற்பனைக்கு**

CP CBH-3841 Suzuki Wagon R. 2018, கூடிய விலைக் கோரிக்கைக்கு, வெலிபல் பினான் ஸ் பிஎல்சி, 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே.. 0714542958. 075662

WP KI-4060 Suzuki Swift, 2003, car கூடிய விலைக் கோரிக்கைக்கு, வெலிபல் பினான் ஸ் பிஎல்சி, 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0714542958. 075672

**118 ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு**

WP KE-7111 Hyundai Tucson, 2006, jeep கூடிய விலைக் கோரிக்கைக்கு, வெலிபல் பினான் ஸ் பிஎல்சி, 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0714542958. 075654

**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

WP DAC-5365 Tata Super Ace, 2015, lorry கூடிய விலைக் கோரிக்கைக்கு, வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே.. 0714 5 4 2958. 075664

WP L E - 5162 Tata Lorry, 2007, கூடிய விலை க் கோரிக்கை க்கு, வெலிபல் பி னான் ஸ் பிஎல்சி, 310 , காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0714 5 42958. 075670

WP L O -9248 Isuzu Elf, 2010, lorry கூடிய விலைக் கோரிக்கைக்கு , வெலிபல் பினான் ஸ் பிஎல்சி, 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0714542958. 075656

WP NA-0491 Ashok Leyland Viking, 2005, Bus கூடிய விலைக் கோரிக்கைக்கு, வெலிபல் பி னான் ஸ் பிஎல்சி, 310 , காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0714 5 42958. 075655

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

NC Q L -9724 Bajaj, 2007 , WP AAK-1301 B ajaj, 2013, Thre e w heel கூடிய விலை க் கோரிக்கைக்கு, வெலிபல் பி னான் ஸ் பிஎல்சி, 310 , காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0711 2 10810. 075649

SP A A W-4346 Bajaj, 2014, NW YZ-2098 Baja j , 2012, NC JD-9203 Bajaj, 2004, NC AAT-2365 Bajaj, 2014, Threewh e el கூடிய விலைக் கோரிக்கைக்கு, வெலிபல் பி னான் ஸ் பிஎல்சி, 310 , காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0711 2 10810. 075652

WP B J A-8709 TVS NTOR Q , 2020, moto r c ycle கூடிய விலை க் கோரிக்கை க்கு, வெலிபல் பினான் ஸ் பிஎல்சி, 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0711210810. 075657

WP QD-7673 Bajaj, 2005, CP QW-0772 Bajaj, 2009, CP YT-4714 Bajaj, 2011, Threew h eel கூடிய விலைக் கோரிக்கைக்கு, வெலி ப ல் பினான்ஸ் பிஎல்சி, 3 10, காலி வீ தி, கொழும்பு 0 3. தொ.பே.. 0 711 2 1 0810. 075659

W P Q Z - 1635 Bajaj, 2010, SP AAO-8981 B aja j , 2014, WP A AT- 0 1 8 6 Bajaj , 2014, Threewhee l கூடிய விலைக் கோ ரி க்கைக்கு, வெலிபல் பி னான் ஸ் பிஎல்சி, 310 , காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0711 2 10810. 075658

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

## போதனா வைத்தியசாலை – இரத்தினபுரி

# கேள்விக்கான அழைப்பு

இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் 2023ஆம் ஆண்டிற்கு தேவையான கீழ்க்காணும் பெறுகைக்காக தகைமையும் தகுதியுமுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | கோவை இலக்கம்/ கேள்வி இலக்கம் | உருப்படி/விபரம் | கேள்விப்பிணையின் பெறுமதி ரூ. |
|---|---|---|---|
| 01 | THR/FBA/SC/01/2023 | காகிதாதிகள் (சீஆர் புத்தகங்கள்/பேனா/பென்சில்/கம்பியூட்டர் சீட்/A4 பெக்கற் போன்றன) | 30,000.00 |
| 02 | THR/FBA/SC/02/2023 | பாவனைப் பொருட்கள் (Lquid soap/Toilet soap/Laundry soap போன்றன) | 30,000.00 |
| 03 | THR/FBA/SC/03/2023 | டோனர் மற்றும் காட்ரிஜ் (HP/Samsung/Lexmark/canon போன்ற வகைகள்) | 15,000.00 |
| 04 | THR/FBA/SC/04/2023 | குப்பைகள் உள்ளிடும் உறைகள் | 15,000.00 |
| 05 | THR/FBA/SC/05/2023 | சீ.டி உறைகள்/எக்ஸ்ரே உறைகள்/மருந்து உறைகள் போன்ற உறை வகைகள் | 30,000.00 |
| 06 | THR/FBA/SC/06/2023 | அங்க பிரதியீடு மற்றும் நேரடி சீராக்கல் பிரிவிற்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்தல் | 10,000.00 |
| 07 | THR/FBA/SC/01/2023 | துணி வகைகள் (சிடின்துணி) G.S. துவாய்/ரெக்சின் போன்றவை | 30,000.00 |
| 08 | THR/FBA/GEN/01/2023 | உரிமை கோரப்படாத சடலங்கள், தொப்புள் கொடிகள் மற்றும் ஏனைய பாகங்களை அகற்றுதல் | 10,000.00 |
| 09 | THR/FBA/GEN/02/2023 | டயர் கொள்வனவு செய்தல் 2023 | 15,000.00 |
| 10 | THR/FBA/CAN/ பெறுகை/20/2022 | 2023/2024ஆம் ஆண்டிற்கு வைத்தியசாலை உணவகத்தை நடத்திச் செல்லல் | 40,000.00 |

- ஒவ்வொரு கேள்வி இலக்கத்திற்கும் வேறுவேறாக ரூ. 3,000.00 மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை செலுத்திய பின்பு கேள்வி ஆவணத் தொகுதியை கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.
- கேள்வி ஆவணங்களை 2022.12.12 வரை அலுவலக நாட்களில் (அரச பகிரங்க விடுமுறை தினங்கள் தவிர்த்து) மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை விநியோகிக்கப்படும்
- அரச ஒப்பந்தங்களை மீறியுள்ள அபகீர்த்தியானோர் பட்டியலிடப்பட்டுள்ள நபர்களுக்கு கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப்பட மாட்டாது.
- ஒரு கேள்விதாரருக்கு மேற்படி கேள்வி இலக்கங்கள் எந்த அளவிலும் கேள்விகளை சமர்ப்பிக்க முடியும். எனினும் அதற்காக வேறுவேறாக கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். (மாற்றுக் கேள்விகள் ஏற்கப்பட மாட்டாது)
- பொறியிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம் அல்லது பணிப்பாளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
- கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் 2023.01.11 மு.ப. 10.30 இற்கு முடிவடைவதுடன் அதன் பின்னர் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்பட மாட்டாது
- 2023.01.11 மு.ப. 10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும் கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அனுமதியளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிப்பதற்கு அனுமதியளிக்கப்படும்.
- கேள்விகள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி இலக்கம்/ கோவை இலக்கம் கீழ்க்காணுமாறு குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும். உ+ம் THR/FBA/SC/01/2023'
- உருப்படி இலக்கம் 07, 08, 09 தவிர்ந்த விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் உருப்படிகள் சகலதையும் தெளிவாக அறியக்கூடிய விதத்தில் தயாரிக்கப்பட்ட சாம்பிளைச் சமர்ப்பித்தல் கட்டாயமாகும். அவ்வாறு செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- எந்தக் கேள்வியையும் அல்லது அதன் ஒரு பகுதியை எந்தக் காரணமும் கூறாமலேயே ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.
- தேவையற்ற தாமதங்களை தவிர்த்துக் கொள்வதற்காக கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ள வருகை தருவதற்கு முன்பு தயவு செய்து 045-2222261 (307) இலக்கத்தை அழையுங்கள்

**தலைவர்,
பிரதேச பெறுகைக் குழு,
போதனா வைத்தியசாலை,
இரத்தினபுரி.**

## பௌத்த மத அலுவல்கள் திணைக்களம்

## 1931 இல 19 விஹார தேவாலகம் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவின் கீழ்

### பஸ்நாயக்க நிலமே ஒருவரை தேர்ந்தெடுப்பதற்காக குறித்த கூட்டம் கீழ்க்காணுமாறு நடைபெறும்.

| தேவாலயத்தின் பெயர் | கூட்டம் நடைபெறும் திகதி மற்றும் நேரம் | கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|
| **கண்டி மாவட்டம்** | | |
| ஸ்ரீமஹா கதிர்காம தேவாலயம் | 2023 ஜனவரி 13ம் திகதி மு.ப. 10.00 இற்கு | கண்டி மாவட்ட செயலக கேட்போர்கூடம் |
| ஸ்ரீ மஹா விஷ்ணு தேவாலயம் | 2023 ஜனவரி 27ம் திகதி மு.ப. 10.00 இற்கு | கண்டி மாவட்ட செயலக கேட்போர்கூடம் |
| கடலாதெனிய ஸ்ரீ விஷ்ணு தேவாலயம் | 2023 பெப்ரவரி 01ம் திகதி மு.ப. 9.30 இற்கு | கண்டி மாவட்ட செயலக கேட்போர்கூடம் |
| அலவத்துகொட சமன் தேவாலயம் | 2023 பெப்ரவரி 01ம் திகதி மு.ப. 11.00 இற்கு | கண்டி மாவட்ட செயலக கேட்போர்கூடம் |
| **பதுளை மாவட்டம்** | | |
| சுமன சமண் மகா தேவாலயம் மஹியங்கன | 2023 ஜனவரி 20ம் திகதி மு.ப. 10.00 இற்கு | பதுளை மாவட்ட செயலக கேட்போர்கூடம் |

02. குறித்த தேவாலயத்தின் பஸ்நாயக்க நிலமே பதவிக்கு விண்ணப்பிப்போர் குறித்த நேரத்திற்கு அக்கூட்டத்திற்கு சமுகமளிப்பதுடன் பௌத்த விஹார தேவாலகம் சட்ட வாக்கத்தின் 14 மற்றும் 40ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகைமைகள் தமக்கு உள்ளன என்பதற்கு சான்றாக சத்தியப்பிரமாண பத்திரமொன்றை சமர்ப்பிப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும. குறித்த சத்தியப் பிரமாண பத்திரத்தை இவ் அலுவலகத்தில் அல்லது பௌத்த விவகாரங்கள் பற்றிய கண்டி/ இரத்தினபுரி/ குருநாகல் பிரதேச அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

03. விண்ணப்பதாரிகளின் தகைமைகளை உறுதி செய்வதற்காக பௌத்தமத அலுவல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு வேறு சான்றுகள் தேவைப்படின் அவ்வாறு தேவைப்படும் சான்றுகளைச் சமர்ப்பிப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

04. பஸ்நாயக்க நிலமே பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படும் நபரால் மேற்படி பதவிக்கு வேலை பொறுப்பேற்பதற்கு முன் காசாக பிணை வைத்தல் வேண்டும்.

**சுனந்த காரியப்பெரும
பௌத்த மத விவகாரங்கள் ஆணையாளர் நாயகம்,
2022.12.06 பௌத்த மத விவகாரங்கள் திணைக்களம்.**

## ஏலவிலை கோரலுக்கான அழைப்பு

### வர்த்தக ரீதியிலான வெடி பொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களைக் கொள்வனவு செய்யும் அலகு, வெலிசர, ராகம இற்கு வெடிபொருட்களை வழங்கல்

வர்த்தக ரீதியிலான வெடி பொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை கொள்வனவு செய்யும் அலகிற்கு (CEFAP UNIT) பின்வரும் வெடி பொருட்களை வழங்கலிற்காக, அமைச்சின் பெறுகைக் குழுவினால தகைமைகளைப் பூரணப்படுத்தக்கூடிய வழங்குநர்களிடமிருந்து மாத்திரம் முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| SN | Description | Qty |
|---|---|---|
| 1 | Ammonium Nitrate (Lot 1) | 100 Mt |
| 2 | Ammonium Nitrate (Lot 2) | 100 Mt |
| 3 | Ammonium Nitrate (Lot 3) | 100 Mt |
| 4 | Ammonium Nitrate (Lot 4) | 100 Mt |
| 5 | Ammonium Nitrate (Lot 5) | 100 Mt |

2. இதற்காக ஆர்வமுள்ள தகைமைகளை பெற்றுள்ள கேள்விதாரர்கள் வர்த்தக ரீதியிலான வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களைக் கொள்வனவு செய்யும் அலகின் கொள்வனவு அலுவலரிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் பின்வரும் 3ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் 42 நாட்களிற்குள் கேள்விப் படிவங்களை இலவசமாகப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.

3. முகவரி:

அவதானம், பணிப்பாளர், வர்த்தக ரீதியிலான வெடிபொருட்கள், துப்பாக்கிகள், மற்றும் தோட்டாக்களைக் கொள்வனவு செய்யும் அலகு

முகவரி : வர்த்தக ரீதியிலான வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களைக் கொள்வனவு செய்யும் அலகு, வெலிசர - ராகம.

தொலைபேசி : 0112958227 - 0112955514

தொலைநகல் : 0112955515

மின்னஞ்சல் : director.cefap@gmail.com

4. தேர்ந்தெடுக்கப்படும் கேள்விதாரர்கள் வெடிபொருட்களை நேரடியாக அல்லது வெளிநாட்டு வழங்குநர்கள் மூலமாக இறக்குமதி செய்து வழங்குதல் வேண்டும் என்பதுடன் அவற்றை, வர்த்தக ரீதியிலான வெடிபொருட்கள், துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களைக் கொள்வனவு செய்யும் அலகு, ஏகல, வெலிசர, ராகம இற்கு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

5. இலங்கையில் வெடிபொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதி பெற்றுள்ள கைத்தொழில்களிற்கு மற்றும் நபர்களிற்கு இந்த அமோனியம் நைத்திரேட் விற்பனை செய்யப்படும். வெடிபொருட்களை விற்பனை செய்யும் விலைகளை, பாதுகாப்பு அமைச்சு தீர்மானிப்பதுடன், தேர்ந்தெடுக்கப்படும் கேள்விதாரர்களினால் குறிப்பிடப்படும் விலைக்கு பொதுக்கரும செலவினமொன்று சேர்க்கப்பட்டுள்ளது.

6. தேர்ந்தெடுக்கப்படும் கேள்விதாரர்களிற்கு வெடிபொருட்கள் கிடைக்கப்பெற்று 30 நாட்களிற்குள் அவற்றை விற்பனை செய்து பெற்றுக்கொள்ளப்படும் வருமானத்திலிருந்து கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

7. இதற்காக ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 03ம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் எழுத்துருவ விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து, கேள்விப்படிவமொன்றிற்காக மீளளிக்கப்படாத ரூபா 3,000.00 இற்கான கட்டணத்தைக் காசாகச் செலுத்தி (ரூபா மூன்றாயிரம்) ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான கேள்விப் படிவத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

8. 2023 ஜனவரி 24ஆம் திகதி 14.00 மணிக்கு கேள்விகள் மூடப்படும்.

**தலைவர்,
அமைச்சின் பெறுகைக் குழு,
பாதுகாப்பு அமைச்சு**

## இலங்கை துறைமுக அதிகார சபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/PT/6416(MP) | Spare Parts for Kato CR – 100 Mobile Crane | 35,000.00 | 1,000.00 | 12-01-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/06/PT/6413(EL) | Local Display Units for Wartsila W26 Series Engines | 160,000.00 | 3,500.00 | 12-01-2023 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/21/PT/20/023 | 20 Nos. Rugged Tab | 60,000.00 | 1,000.00 | 20-12-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/10/017 | Windows Server 2019 Standard and Microsoft SQL Server 2019 Standard | 50,000.00 | 1,000.00 | 20-12-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/16/015 | Restoration of Crane Monitoring System of Transfer Cranes at JCT | 250,000.00 | 3,500.00 | 20-12-2022 பி.ப. 1.30 மணி |
| CES/LP/22/PT/13/33 | Rapid Application Development Tools & Licenses | 50,000.00 | 1,000.00 | 21-12-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/04/017 | Anchor Chain 300 Meters | 50,000.00 | 1,000.00 | 21-12-2022 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/09/062 | 02 Nos . After Cooler for Cummins Engine of Transfer Cranes | 55,000.00 | 1,000.00 | 05-01-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/01/053 | D Type Rubber Fenders | 17,500.00 | 1,000.00 | 05-01-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/12/052 | MS Plates 2400 X 1200 X 25MM 04 Nos | 18,400.00 | 1,000.00 | 05-01-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/10/057 | Caterpillar C -15 Engines Fitted to ZPMC RTGC'S at JCT | 360,000.00 | 3,500.00 | 09-01-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/17/061 | 02 Nos. Telescoping Belt for Stinis Twin Lift spreaders | 16,000.00 | 1,000.00 | 09-01-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/22/PT/04/060 | Trouser Black, Blue & White – 1700 Nos | 40,000.00 | 1,000.00 | 09-01-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/22/PT/14/022 | 130M$^3$ Ready Mixed Concrete (Grade 30) | 65,000.00 | 1,000.00 | 15-12-2022 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2022 டிசம்பர் 09ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள்),
வழங்கல்கள் பிரிவு,
இலங்கை துறைமுக அதிகார சபை,
இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.
தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638
தொலைநகல் எண்: 2381652, 2470443**

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to. classified@lakehouse.lk
SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342

# பாடசாலை நீர் விளையாட்டு ஆரம்பம்



பாடசாலை நீர் விளையாட்டு சங்கத்தின் ஏற்பட்டில் 47ஆவது வருடாந்த அகில இலங்கை பாடசாலை நீர் விளையாட்டு சம்பியன்சிப் போட்டி நேற்று (07) சுகததாச நீச்சல் தடாகத்தில் ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வில் பங்கேற்றுள்ள கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த, இலங்கை பாடசாலை நீர் விளையாட்டு சம்மேளன தலைவி திருமதி சந்தானி உதயகும்புர, செயலாளர் கிரிஷான் துமிந்த, நெஸ்ட்லே லங்கா முகாமைத்துவ பணிப்பாளர் பந்துல எகொடகே, நெஸ்ட்லே லங்கா நிறுவன ஒழுங்குமறை விவகார உப தலைவர் பந்துல எகொடகே, நிறுவனத்தின் பால் உற்பத்திக்கான உப தலைவர் ருவன் வெலிகல ஆகியோரை படத்தில் காணலாம். இந்த நீர் விளையாட்டுப் போட்டிக்கு நெஸ்ட்லே மைலோ அனுசரணை வழங்குகிறது.

## உலகக் கிண்ண கால்பந்து:

# மொரோக்கோ அணி வரலாற்று வெற்றி: காலிறுதியில் போர்த்துக்கலுடன் மோதல்

உலகக் கிண்ண கால்பந்து தொடரின் கடைசி இரு நொக் அவுட் போட்டிகளிலும் ஸ்பெயினுக்கு அதிர்ச்சி கொடுத்து மொரோக்கோ அணியும் சுவிட்சர்லாந்தை துவம்பசம் செய்து போர்துக்கல் அணியும் வெற்றியீட்டி காலிறுதிச் சுற்றுக்கு முன்னேற்றம் கண்டன.

இதன்படி மொரோக்கோ மற்றும் போர்த்துக்கல் அணிகள் வரும் சனிக்கிழமை (10) காலிறுதிப் போட்டியில் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

### காலிறுதிப் போட்டி அட்டவணை

| திகதி | போட்டி | நேரம் | இடம் |
|---|---|---|---|
| டிசம்பர் 09 | குரோசியா–பிரேசில் | இரவு 8.30 | கல்வி நகர அரங்கு |
| டிசம்பர் 10 | நெதர்லாந்து–ஆர்ஜன்டீனா | மு.ப. 12.30 | லுசைலா அரங்கு |
| டிசம்பர் 10 | மொரோக்கோ–போர்த்துக்கல் | இரவு 8.30 | அல்–துமாமா |
| டிசம்பர் 11 | இங்கிலாந்து–பிரான்ஸ் | மு.ப. 12.30 | அல்–பைத் அரங்கு |



இதில் கடந்த செவ்வாய்க்கிழமை (06) நடைபெற்ற ஸ்பெயினுக்கு எதிரான 16 அணிகள் சுற்றில் மொரோக்கோ அணி பெனால்டி சூட் அவுட் முறையில் 3–0 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது. போட்டியின் முழு நேரம் மற்றும் வழங்கப்பட்ட அரை மணி மேலதிக நேரத்திலும் இரு அணிகளும் கோல் பெற தவறின.

முடிவை தீர்மானிக்கும் பெனால்டி சூட் அவுட்டில் முன்னாள் உலக சம்பியனும் பலம் மிக்க அணியுமான ஸ்பெயின் ஒரு ஸ்பொட் கிக்கைக் கூட வலைக்குள் செலுத்தவில்லை. பப்லோ சரபி, கார்லொஸ் மற்றும் செர்கியோ புக்குட் உதைத்த பெனால்டி சூட் அவுட்களை மொரோக்கோ கோல் காப்பாளர் யாசின் பவுனு அபாரமாகத் தடுத்தார்.

இதன்மூலம் மொரோக்கோ அணி உலகக் கிண்ண வரலாற்றில் முதல் முறை காலிறுதிச் சுற்றுக்கு முன்னேற்றம் கண்டது.

இதேவேளை இலங்கை நேரப்படி நேற்று (07) அதிகாலை நடைபெற்ற சுவிட்சர்லாந்துக்கு எதிரான நொக் அவுட் போட்டியில் நட்சத்திர வீரர் ரொனால்டோவை இருக்கையில் அமர வைத்து களமிறங்கிய போர்த்துக்கல் 6–1 என்ற கோல் வித்தியாசத்தில் அதிரடி வெற்றியீட்டியது. ரொனால்டோவுக்கு பதில் களமிறக்கப்பட்ட 21 வயது கன்காலோ ராமோஸ் ஹட்ரிக் கோல் புகுத்தினார்.

2006இல் ஜெர்மனியில் நடந்த உலகக் கிண்ணத்திற்குப் பின்னர் போர்த்துக்கல் அணி நொக் அவுட் போட்டியில் வெல்வது இது முதல் முறையாகும்.



# இராஜதந்திர கிரிக்கெட் போட்டி டிசம்பர் 10 இல்

ருஸைக் பாரூக்

தூதரககிரிக்கெட் குழு ஒழுங்குசெய்துள்ள தூதரகங்கள் மற்றும் ஐ. நா. முகவர் நிலைய உறுப்பினர்களுக்கிடையிலான இராஜதந்திர கிரிக்கெட் தொடர் வரும் டிசம்பர் 10ஆம் திகதி ராஜகிரிய சந்திரா சில்வா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. தொடர்ச்சியாக நான்காவது வருடமாக நடைபெறும் இந்தப் போட்டி நிகழ்வுக்கு இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க மற்றும் செயலாளர் கலாநிதி அமல் ஹர்ஷ டி சில்வா பிரதம அதிதிகளாகவும் டவர் மண்டப நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஹாசிம் உமர் கௌரவ அதிதியாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# இலங்கை வெற்றியுடன் ஆரம்பம்



வட கொழும்பு தினகரன் நிருபர்

விழிப்புலனற்றோருக்கான டி20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை அணி தனது முதல் போட்டியில் அவுஸ்திரேலிய அணியை 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

புது டெல்லியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட ஆஸி. அணி 20 ஓவர்களுக்கும் 9 விக்கெட்டுகளை இழந்து 158 ஓட்டங்களை பெற்றது. சுரங்க சம்பத் 2 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

தொடர்ந்து பதிலெடுத்தாடிய இலங்கை அணி 13.4 ஓவர்களிலேயே 162 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. பந்துவீச்சில் சோபித்த சம்பத் துடுப்பாட்டத்திலும் 63 ஓட்டங்களை குவித்து ஆட்ட நாயகன் விருதை வென்றார்.

# பாக். விழிப்புலனற்ற கிரிக்கெட் அணிக்கு இந்தியா விசா மறுப்பு



இந்தியாவில் தற்போது நடைபெற்று வரும் வழிப்புலனற்றோர் டி20 உலகக் கிண்ணப் போட்டிக்கான பாகிஸ்தான் அணிக்கு இந்தியா வர விசா மறுக்கப்பட்டுள்ளது.

'இந்த துரதிருஷ்டவசமான நிகழ்வினால் பாகிஸ்தான் விழிப்புலனற்றோர் கிரிக்கெட் குழப்பதற்கு உள்ளாகியுள்ளது' என்று அந்த கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது. இந்தத் தொடரில் தமது அணி கிண்ணத்தை வெல்ல அதிக வாய்ப்பு இருப்பதாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

பாகிஸ்தான் விழிப்புலனற்றோர் கிரிக்கெட் சம்மேளனம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் கூறும்போது, 'இந்தியாவின் பாகுபாடு காண்பிக்கும் செயற்பாட்டை கண்டிப்பதோடு பிராந்திய அரசியலுக்கு அப்பால் விளையாட்டு இருக்க வேண்டும்' என்று வலியுறுத்தியது.

இந்தத் தொடரில் பாகிஸ்தான் இடம்பெறாதது அதிருப்தியை ஏற்படுத்தி இருப்பதாக இந்திய விழிப்புலனற்றோர் கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.

பாகிஸ்தானில் நடைபெறவுள்ள ஆசிய கிண்ணம் மற்றும் இந்தியாவில் நடைபெறவுள்ள ஒருநாள் உலகக் கிண்ண போட்டிகளில் பரஸ்பரம் இரு நாடுகளும் பயணிப்பது குறித்து இழுபறி நிலை நீடித்து வரும் சூழலிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

# கண்டி அதிரடி வெற்றி



வனிந்து ஹசரங்கவின் ஹட்ரிக் விக்கெட் மற்றும் அன்ட்ரே பிளட்சரின் அதிரடி சதத்தின் உதவியோடு கொலம்போ ஸ்டார்ஸ் அணிக்கு எதிரான எல்.பி.எல் போட்டியில் கண்டி பெல்கோன்ஸ் அணி 109 ஓட்டங்களால் அதிரடி வெற்றியீட்டியது.

லங்கா பிரீமியர் லீக் தொடரின் ஆரம்ப நாளான கடந்த செவ்வாயன்று (06) இரண்டாவது போட்டியாக நடந்த இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட கண்டி பெல்கோன்ஸ் 20 ஓவர்களுக்கும் 1 விக்கெட்டை மாத்திரம் இழந்து 199 ஓட்டங்களை குவித்தது. பிளட்சர் ஆட்டமிழக்காது 102 ஓட்டங்களை விளாசியதோடு பத்தும் நிசங்க 41 பந்துகளில் 71 ஓட்டங்களை குவித்தார்.

பதிலெடுத்தாடிய அஞ்சலோ மத்தியுஸ் தலைமையிலான கொலம்போ ஸ்டார்ஸ் 90 ஓட்டங்களுக்கே சுருண்டது. இதில் ஏழாவது ஓவரை வீசிய ஹசரங்கள் ஹட்ரிக் விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு 3 ஓவர்களில் 14 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

# பீலேவின் உடல்நிலையில் முன்னேற்றம்



பிரேசிலின் முன்னாள் கால்பந்து ஜாம்பவான் பீலேவின் உடல்நிலை முன்னேற்றம் அடைந்துள்ளது என அல்பர்ட் ஐன்ஸ்டீன் மருத்துவமனை அறிக்கை வெளியிட்டுள்ளது.

பீலேவுக்கு புதிதாக எந்தவொரு பாதிப்பும் இல்லை என்றும் அவருக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். குடல் பகுதியில் இருந்த புற்றுநோய் கட்டி அகற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த பீலேவுக்கு, கொரோனாவால் சுவாசப்பிரச்சினை ஏற்பட்டது.

# ஜெர்மனியில் ஆட்சிக் கவிழ்ப்பு சதி: நாடெங்கும் 25 பேர் கைது



அரசை கவிழ்க்க சதி செய்த சந்தேகம் தொடர்பில் ஜெர்மனி எங்கும் நடத்தப்பட்ட சுற்றுவளைப்புத் தேடுதல்களில் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தீவிர வலதுசாரிகள் மற்றும் முன்னாள் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் பாராளுமன்றம் மற்றும் அரச கட்டடத்தை ஆக்கிரமித்து அதிகாரத்தை கைப்பற்ற சதி செய்ததாக ஜெர்மனியில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தம்மை எட்டாவது ஹெயின்ரிச் இளவரசர் என்று அழைத்துக் கொள்ளும் ஒருவரே இந்த சதியில் ஈடுபட்டிருப்பதோடு மூளையாக செயற்பட்டுள்ளார். 11 ஜெர்மனி மாநிலங்களில் இருந்து கைது செய்யப்பட்டவர்களில் இவரும் இருப்பதாக மத்திய அரச வழங்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

கடும்போக்கு ரிச்பெர்கர் அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்களும் இந்த சதியில் இடம்பெற்றுள்ளனர். வன்முறை தாக்குதல்கள் மற்றும் இனவெறி சதிக் கோட்பாடுகள் தொடர்பில் இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஜெர்மனி பொலிஸாரின் கண்காணிப்பில் நீண்ட காலமாக இருந்து வருபவர்களாவர். இவர்கள் தற்கால ஜெர்மனி அரசை அங்கீகரிக்க மறுக்கின்றனர்.

இந்தக் குழுவில் ஆண்கள் மற்றும் பெண்கள் என சுமார் 50 பேர் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் ஜெர்மனி அரசை கவிழ்த்து இரண்டாவது ரிச் பேரரசு என்று அழைக்கப்படும் 1871ஆம் ஆண்டின் வடிவிலான அரசொன்றை அமைக்கும் சதியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் நாட்டின் பெரும்பகுதியை உள்ளடக்கும் வகையில் 130 இடங்களில் ஆயிரத்துக்கும் அதிகமான அதிகாரிகள் இந்தத் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

## சர்வதேச செய்திகள்

# சீனாவின் கண்டிப்பான கொவிட் கட்டுப்பாடுகளில் அதிரடி தளர்வு



சீனாவில் மக்கள் ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து மக்களை தனிமைப்படுத்தும் முகாம்களுக்கு வலுக்கட்டாயமாக அனுப்புவது உட்பட கண்டிப்பான கொவிட் கட்டுப்பாடுகளை அந்த நாடு தளர்த்தியுள்ளது.

அறிகுறியற்ற கொரோனா தொற்று உள்ளவர்கள் இனி அரச நிலையங்களுக்கு செல்வதற்கு பதில் வீட்டிலேயே தனிமைப்படுத்திக்கொள்ள முடியும். அதேபோன்று பெரும்பாலான இடங்களில் கொரோனா சோதனை முடிவை காண்பிக்கத் தேவையில்லை என்பதோடு நாட்டுக்குள் அதிகம் சுதந்திரமாக நடவமாட மக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாண்டின் ஆரம்பத்தில் ஒருவருக்கு வைரஸ் தொற்று அடையாளம் காணப்பட்டாலும் மொத்த சமூகமும் முடக்கநிலையில் வைக்கப்பட்டது. கடந்த மாதம் விதிமுறைகளில் சில மாற்றங்கள் அறிவிக்கப்பட்டன. அவற்றின்படி, ;தொற்று அடையாளம் காணப்பட்ட கட்டடம் மட்டும் முடக்கநிலையில் வைக்கப்பட்டால் போதுமானது.

உருமாற்றம் பெற்றிருக்கும் வைரஸின் தன்மைக்கு ஏற்ப நடைமுறைகள் மாற்றப்பட்டுள்ளதாக சீனாவின் சுகாதார ஆணையம் குறிப்பிட்டது.

இந்த அதிரடி மாற்றங்கள் மூலம் சீனா முழுமையாக கொரோனா தொற்றை துடைத்தொழிக்கும் கொள்கையை தளர்த்தியுள்ளது. உலகின் ஏனைய இடங்களில் கொரோனா தொற்றுடன் வாழும் கொள்கையையே கடைப்பிடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சீனாவில் கொரோனா தொற்று தற்போதும் தீவிரம் அடைந்து தினசரி 30,000க்கும் மேற்பட்ட தொற்றுச் சம்பவங்கள் பதிவாகி வரும் நிலையிலேயே இந்தத் தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கொரோனா முடக்க நிலையுடன் தொடர்புபட்ட அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் ஏற்பட்ட தீயில் பலர் உயிரிழந்த சம்பவத்தை அடுத்தே சீனாவில் கொரோனா கட்டுப்பாட்டுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் பல நகரங்களிலும் வெடித்தன.

இதனைத் தொடர்ந்தே சீனா தனது கொரோனா கட்டுப்பாடுகளில் படிப்படியாக தளர்வுகளைக் கொண்டுவந்து தற்போது அதிரடி மாற்றங்களை அறிவித்துள்ளது.

# சீன பட்டுப்பாதைக்கு ஆப்கான் கோரிக்கை



பீஜிங் வரையான பட்டுப்பாதை வர்த்தகத்தை மீண்டும் திறப்பதற்கான முயற்சிகளைத் துரிதப்படுத்துமாறு ஆப்கானிஸ்தானின் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் நூருத்தீன் அஸீஸி சீனாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வகான் வழித்தடம் அல்லது பட்டுப்பாதையின் ஊடாக இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தை மேம்படுத்த முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்

உலகளாவிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி மூலோபாயத்தின் கீழ் சீனா இந்த பட்டுப்பாதை முயற்சியை முன்னெடுத்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 டிசம்பர் மாதம் 8ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.